**GLORIA TRAVELS**

Market View, MANIPAY

பிரயாண
ஒழுங்குகள்

*London, Canada*
*Germany France,*
*Norway*

★ டோகா (Open Visa)
ஆகிய நாட்டிற்கான
பிரயாண ஒழுங்குகள்
செய்து தரப்படும்.

எமக்கு வேறு கிளைகள்
கிடையாது.



Registered as a News paper in Sri Lanka விலை ரூபா: 2.25

# ஈழமுரசு

தமிழ்த்தேசிய ஞாயிறு வார மலர்

முரசு 4 26-7-87 ஞாயிறு ஆடி 10 ஜுல்ஹஃதா 29 முழக்கம் 172



**NEEM AGENCIES**
*32, A.* Horton Place,
COLOMBO. 7

நீம்ஸ் ஏஜென்சீஸ்
*32 A,* ஹோட்டன் பிளேஸ்,
கொழும்பு 7.

**சிங்கப்பூரில்**
பணிப் பெண்களுக்கு
வேலைவாய்ப்பு உண்டு.
சிங்கப்பூருக்கு நேரில்
சென்று உரிய வெற்றிடங்
களுக்கான தகவல்கள்
பெறப்பட்டுள்ளன.
விபரங்கட்கு: உரிமையாளர்,
A. K. சிவஞானம்
*171 A,* பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Labour Licence No: 585
Approved No:A/L 585/4/87


## ● புலிகள் பிரமுகர் பாலசிங்கம் விளக்கம்

# தமிழ் பொலிஸ், ராணுவம் அமைந்த பின்பே ஆயுதங்களை போடும் பேச்சு

(சென்னை)

"சிறிலங்கா அரசுடன் சமரச உடன்பாடு ஏற்பட்டதும் தமிழ்ப் பொலிஸ் அமைப்பும் தமிழர் இராணுவ அமைப்பும் ஏற்படுத்தப் பட்டபின்னரே ஆயுதங்களைப் போராளிகள் கீழே போடுவது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்" என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. ஏ, எஸ். பாலசிங்கம் தெரிவித்திருக்கிறார், இச்செய்தியை நேற்றைய தினமணி வெளியிட்டிருக்கிறது.



சிறிலங்கா ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு இணைப்பைக் கொண்டபுதிய யோசனைகளைக் கொண்ட உடன்படிக்கை இவ்வார நடுப்பகுதியில் கைச்சாத்திடப்படும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. இந்த உடன்படிக்கை கைச்சாத்தானபின் போராளிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டுமென்றும் இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்படுமென்றும் இந்தியாவிலுள்ள தீவிரவாதிகளின் முகாம்கள் மூடப்பட்டுத் தீவிரவாதிகளும் அகதிகளும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்களென்றும் புதிய திட்டத்தை ஆதாரம் காட்டி செய்திகள் வெளிவந்துள்ளன.

இச்செய்திகள் பற்றிக் குறிப்பிடுகையிலேயே ஆயுதங்களைக் கீழே போடுவது சம்பந்தமாக திரு. ஏ. எஸ். பாலசிங்கம் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

**தனித் தேசிய இனம**

இலங்கையில் தமிழ் மக்களைத் தனித் தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கும் சிறிலங்கா அரசு சம்மதம் தெரிவித்திருப்பதாகவும் நேற்றைய 'தினமணி' ஒரு செய்தியில் தெரிவித்திருக்கிறது.

**இஸ்ரேல் பிரிவு மூடப்படும்**

சமரச உடன்பாடு ஏற்பட்டதும் இலங்கையில் உள்ள


14ஆம பக்கம் பார்க்க


**நேற்றைய தினமணி**

## பிரபாவுக்காக ஒருநாள் ஒத்திவைப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் முதல்வர் எம். ஜி. ஆரைச் சந்திக்க வந்தமையினால் ஒத்திவைக்கப்பட்ட தமிழக அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டம நேற்று முன்தினம் இடம் பெற இருந்தது.

## கோலாகலமாக நடந்த ஜனாதிபதி பதவியேற்பு

(புதுடில்லி)

இந்தியக் குடியரசின் எட்டாவது ஜனாதிபதியாக தமிழ் நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த திரு. இராசமி வெங்கட்ராமன் நேற்று நண்பகல் பதவி யேற்றார். மிகக் கோலாகலமாக நடை பெற்ற இப்பதவியேற்பு வைபவத்தைக் கோடிக் கணக்கான மக்கள் தொலைக் காட்சியில் கண்டுகளித்தனர்.






(14 ஆம் பக்கம் பார்க்க)


## சுதுமலையில் இந்த ஹெலிக்கு ஆசை!

(யாழ்ப்பாணம்)

சுதுமலை, கொக்குவில் ஆகிய பகுதிகளில் இலங்கையின் விமானப்படை ஹெலிகொப்ரர்ஒன்று நேற்று சுற்றி சுற்றி வந்து கண்காணிப்பினை மேற்கொண்டது. விடுதலைப் புலி


(14 ஆம் பக்கம் பார்க்க)


## நேற்றும்கோட்டை வேட்டுக்கு இருவர் காயம்

கோட்டை இராணுவம் நேற்று நடத்திய துப்பாக்கி வேட்டுக்கு முதியவர் ஒருவர்


(14 ஆம் பக்கம் பார்க்க)


## வெளியுறவு அமைச்சின் பொறுப்பும் ராஜீவிடம்!

(புதுடில்லி)

இந்திய மந்திரி சபையில் நேற்று சிறு மாற்றங்கள் செய்யப்பட்டன. தற்போதைக்கு வெளிவிவகார அமைச்சின் பொறுப்பை பிரதமர் ராஜீவ் காந்தியே ஏற்றுக் கொண்டிருக்கிறார். எம். எல். போதிகார் புதிய உருக்கு சுரங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். அமைச்சு இலாகாக்களிலும் சில மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன. வெளிவிவகார அமைச்சராக இருந்த என் டி. திவாரி வர்த்தக அமைச்சையும், பி. சிவசங்கர் திட்டமிடல் அமைச்சையும் ஏற்றுள்ளனர்.




பாராளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத் தொடர் முடிந்தபின் அமைச்சரவையில் பெரும் மாறுதல் செய்யப்படுமென்று பிரதமர் ராஜீவ் நேற்று மாலை தெரிவித்தார்.

நேற்று நண்பகல் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற திரு. வெங்கட்ராமன் முதல் முதலாக புதிய அமைச்சர் போதிகாருக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைத்தார்.

## இஸ்ரேலை இந்தியா வென்றது

(புதுடில்லி)

இந்தியாவில் டெல்லியில் நடைபெற்ற டேவிஸ்சிண்ண டென்னிஸ் போட்டியில் இந்தியா ஒற்றை ஆட்டத்திலும் இருவர் ஆட்டத்திலும கால் இறுதி ஆட்டத்திலும் வெற்றியீட்டியது. இநதியாவை எதிர்த்து இஸ்ரேலிய வீரர்கள் ஆடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



▣ 24, 25 வயதிற்கு மேற்பட்ட Cleaners Labourers வேலைவாய்ப்புக்கான வெற்றிடங்கள் எம்மிடமுண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

▣ ஈராக்கிற்கு எம்மிடம் சில வெற்றிடங்கள் மட்டும் தான் உண்டு. எல்லாவற்றிற்கும் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

## T. இந்திரநாதன்

கல்லூரி வீதி,
சோதி லேன்,
காங்கேசன்துறை

96, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

B/2717

# DIPLOMA IN NURSING

## தாதிப் பயிற்சி நெறி

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலை வாய்ப்பு பெற இருப்பவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். அரசினர் பாடத்திட்டத்திற்கமைந்த பாடங்களும் நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் செய்முறைப் பயிற்சியும் நடாத்தப்படுகின்றன.

உலகின் எந்த நாட்டிலும் வேலைவாய்ப்பு பெற ஆங்கில, ஜேர்மன், சீன மருந்தியலும் கற்பிக்கப்படுகின்றன.

சீன மருத்துவத் துறையான அக்குபங்சர் தாதியருக்கு இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன. சொற்ப இடமே இருப்பதால் உங்கள் விண்ணப்பத்தினை நேரகாலத்துடன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபரங்கட்கு:

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல: 54, பருத்தித்துறை வீதி யாழ்நகர்.
(விக்டோறிய வீதி சந்தி அருகாமையில்)

டாக்டர்: V. P. சுந்தரராஜன்
(விசேட அக்குபங்சர் மருத்துவ நிபுணரும், தாதிய போதனாசிரியரும்)

B/2711

★ தரமான போட்டோஸ்ரற் பிரதிகளையும்
★ தெளிவான றோனியோ பிரதிகளையும்
வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்:

## கிளீன் கட்

239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

B/2699

# வரி விளம்பரம்

### பயிற்சி

Computer Programming (BASIC- COBOL), ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங் றீவைன்டிங், வெல்டிங் பயிற்சிகள் கூடியநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம்: 29/ 07/ 87 Jaffna Technical Institute, ஸ்ரான்லிவீதி (றெயில்வே கடவையருகாமை), யாழ்ப்பாணம்.

R/ 1042

### றோனியோ

★ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும்

★ தரமான றோனியோ பிரதிகளையும் நவீன இயந்திரங்களின் உதவியுடனும்

★ தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள விரையுங்கள். கிளீன்கட் 239, மின்சார நிலையவீதி யாழ்ப்பாணம்.

B/2700

### தேவை

யாழ் நகரில் பாதுகாப்பான இடத்தில் அமைந்துள்ள ஸ்தாபனத்தில் கடமையாற்ற மொழிபெயர்ப்பாளர் (Sworn Translator) தேவை, ஆங்கில தட்டச்சு (English Typing) தெரிந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 5th, Aug. 1987, C/o ஈழமுரசு, 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

R/1045

### வாடகைக்கு

மணிக்கூட்டு வீதியிலுள்ள கடைவாடகைக்கு விடப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மகாலிங்கம் புஸ்பமலர், இல: 403 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.

R/1048

### சேவை

குயிக்ஸ்ராார் கலர் சேவிஸ் செய்யும் துரித சேவை. கலர் பிலிம் சுருள்களை Processing (FREE) and printing Within 7 days or 24 Hours. Computer printing செய்து கொள்ளுங்கள்.

163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (கிளை) 66/2, பழம் வீதி, கந்தர்மடம்.

B/2701

## பிறந்த நாள் வாழ்த்து

★ கச்சேரி நல்லூர் வீதி இராஜநாதன் சரோஜினி தம்பதிகளின் புதல்வன் நிரோஷானந் இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

★ எழுவைத்தீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த லூர்துநாயகம் லூர்துமலர் தம்பதிகளின் புதல்வி மரிய தர்சினி இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## DIPLOMA IN NURSING

(தாதிப்பயிற்சியில் டிப்ளோமா)
7ஆம் பகுதிக்கான விரிவுரைகள் ஆரம்பம்
Ist. Aut. 1987
North Ceylon
Technical Institute
14, சென். பீற்றர்ஸ் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

B/2713

ஏமாற்றத்தைத் தவிர்த்து
உங்கள் பிரயாணங்களை
மேற்கொள்ளுங்கள்

# ● மாலைதீவில் வேலைவாய்ப்பு ●

மாலைதீவில் நிரந்தர வேலைவாய்ப்புப் பெற்று பயணம் செய்ய விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
▣ பாஸ்போர்ட் ▣ விசா ▣ விமானச் சீட்டுக்கள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்

★ மாலைதீவிலும், சிங்கப்பூரிலும் பணிப்பெண்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும் ★

★ பிரான்ஸ் ★ நோர்வே ★ நியூசிலண்ட் ★ ஜேர்மனி

▶▶▶▶ போன்ற நாடுகளுக்கான பிரயாண ஒழுங்குகளும் உடன் செய்து கொடுக்கப்படும் ▶▶▶▶

விபரங்களுக்கு: W. ருக்குமணி
(S. V. அப்புத்துரை)
நந்தாவில், கொக்குவில்

தொடர்பு: Wajira Enterprises
40, Bristol Street,
COLOMBO-1

B/2597


யாழ் நகர வாசிகளுக்கோர் அரிய சந்தர்ப்பம்! உங்களுக்குத் தேவையான சகலவிதமான மொத்த சில்லறை சாமான்களுக்குமான சிறந்த ஒரே இடம்

# ★ "ராஜா ஸ்ரோர்ஸ்" ★

எம்மிடம்: ★ பெயின்டிங் வகைகள் ★ வாசனைப் பொருட்கள், ★ லேபல், கிடைச்சி மூடிகள் ★ அசிட் வகைகள்,
★ எலெக்ரிக் மோட்டார் ❁ நெல் குற்றும் மாவரைக்கும் இயந்திரங்களும், உதிரிப் பாகங்களும் பான்சிகுட்ஸ் சாமான்கள்
▣ பாட்டா பாதணிகள் ▣ கண்ணாடிச் சாமான்கள் ▣ எனமல் ▣ அலுமினியப் பாத்திரங்கள் ▣ விளையாட்டு உபகரணங்கள்
▣ சிறுவர்களுக்கான விளையாட்டு பொருட்கள் மற்றும் உங்களுக்குத் தேவையான எரிபொருட்களும் மலிவான விலையில் கிடைக்கும்.

நாடுங்கள்:- ராஜா பில்டிங்
67 & 69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(எமக்கு யாழ் நகரில் வேறு கிளைகள் கிடையாது.)

B/2725




மக்கள் திரட்சியற்று, பிளவுண்டு, தங்கள் நிலைபற்றியோ, சக்திபற்றியோ தெளிவு ஏதுமற்று உள்ளவரை விரோதி அவர்களை ஆட்கொள்வான் இவை களையப்பட்டு அவர்கள் சுயப்பிரக்ஞையும் திரட்சியும் பெற்றுவிட்டால், அவர்களே விரோதியை அழிக்கத்தக்க சக்தி ஆகிவிடுவார்



சமோரா மாஷேல

## உறுதி வேண்டும்

முறுவல் சிதைந்தது ஏன்? பெரு
மூச்சே விடுவது ஏன்?
விழிநீர் இழந்தது ஏன்? முகம்
வாடித் தளர்வது ஏன்?
பெருகும் கவலைகள் ஏன்? மனம்
புண்படும் நிலைமைகள் ஏன்?
உறுதியும் தளர்வது ஏன்? கை
ஓய்ந்தே சலிப்பது ஏன்?

ஆர்வமே பொங்கும் நேரம் - மனம்
அலுத்திடலாமோ? அப்பு!
நீங்களே சோர்ந்தால் எங்கள்
நிலைமைகள் என்னவாகும்?
நேர்மைசேர் உழைப்பினோடு.
நலமுடன் உங்கள் சுற்றம்
வாழ்வதைக் காண வேண்டும்! அப்பு!
வருத்தமேன் இன்னும் வீணே!

— நாக சிவசிதம்பரம்






24 7.87

இன்று நடந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி மக்களுக்கு தனி நம்பிக்கையை ஊட்டியிருக்கும் எமது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் எமது மக்களின் தலைவராக தம்பியை அங்கீகரித்து இந்திய விமானப்படை விமானங்கள் காத்திருந்து அழைத்துச் சென்றன. போராட்டம் ஒரு புதிய வேகத்தில் சென்று கொண்டிருப்பதை இது உணர்த்திற்று

போவதற்கு முன் தம்பி பத்திரிகையாளர்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் ''நான் இறந்து போன அறுநூற்றிப் பதினேழு போராளிகளினதும் சடலங்கள் மீது கடந்து செல்கிறேன். வீடு, வாசல், உடைமை, உயிர் இழந்த எம் மக்களின் இழப்புக்கு மத்தியில் செல்கிறேன் இது எனக்கு விடுக்கப்பட்ட அழைப்பாகக் கருதவில்லை. தமிழீழ மக்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகவே கருதுகிறேன்'' என்று கூறினார்.

கேட்டுக் கொண்டிருந்த என் கண்கள் பனித்தன. எவ்வளவு உயிரோட்டமான வார்த்தைகள். எமது இயக்கப் போராளிகளின் தியாகத்திற்குக் கிடைத்த மதிப்பே தான் இன்று ஆயுதபாணியாக தம்பி அழைத்துச் செல்லப்பட்ட நிகழ்ச்சி.

நான் அடிக்கடி நினைப்பதுண்டு. நாம் எல்லோரும் ஒரே மக்கள் சமுதாயத்தில் தான் இருந்து போராட்டத்திற்கே புறப்பட்டோம். ஏன் எமது பையன்களிடம் இருக்கும் உறுதியும், தீரமும், தியாகமும் ஏனையவர்களிடம் இல்லையென்று'' சிந்தித்துப் பார்த்தால் ஒன்று புரிந்தது. தம்பி எப்போதும் தியாகங்களைத்தான் ஊட்டி, ஊட்டி எம்மை வளர்த்தார். அதனால்தான் இன்று உலக விடுதலைப் போராட்டங்களிலேயே எங்குமே இல்லாதவாறு ''சயனைட்'' எமது போராட்டத்தில்தான் பிரபல்யமாகியுள்ளது. இருநூற்றி இருபத்தைந்துக்கு மேற்பட்ட போராளிகள் சயனைட் அருந்தியுள்ளனர். தம்பி எங்களுக்கு தியாகத்தை ஊட்டி வளர்ப்பதுபோல் ஏனைய இயக்கங்கள் புலிகள்பற்றிய குரோத உணர்வுகளை ஊட்டி வளர்ப்பதும் புரிந்தது.

அடி மனதில் குரோத உணர்வுகளை வளர்க்கும் போது தியாகம் விடை பெற்றுச் சென்று விடுகிறது. அதனால் தான் எம்மைப்போல அவர்களால் சாதிக்க முடியாமல் போய்விடுகிறது. அதே நேரத்தில் நான் எல்லாத் தியாகிகளின் தியாகங்களையும் மதிக்கிறேன். ஏனையவர்களிடமும் குரோத உணர்வுகள் நீங்கி தியாக உணர்வுகளே மேலோங்குமானால் நடைமுறைச் சிக்கல்கள் இருக்காதென நினைக்கிறேன்.

இந்த நேரத்தில் எனது நண்பன் ''மில்லரின்'' நினைவு என்னை வதைக்கிறது இன்று நடந்த நிகழ்ச்சிகளைக் காண நீ இல்லை. தன்னையே சுடச் சொன்ன சீலன் ஆனந்த், ஏனையவர்கள் உயிர் காக்க கைக்குண்டில் மேல் விழுந்து தன்னுயிர் ஈந்த அன்பு, ஒரே கிறனேட்டில் இறந்த போராளிகள், ஒரே சயனைட்டில் இருவர் கடித்து இறந்த போராளிகள், இறக்கும் நேரத்திலும் கைக்குண்டால் அதிரடிப்படையினரை அழித்து தானும் அழிந்த ரவி எல்லோரின் தியாகங்களும் நினைவுக்கு வருகின்றன். கரும்புலி நீயும் எம் மனதில் நிறைந்து நிற்கிறாய். அந்தியேஷ்டிக்கு எலும்போ, சதையோ கூடக் கிடைக்கவில்லை. ஆனால் உன் நினைவு, செயல் மட்டும் வழிகாட்டலாகக் கிடைத்துள்ளது

மில்லர்! வசதியான குடும்பத்தைச் சேர்ந்த நீ வாழத் தெரியாதவனல்ல. வாழ்வின் சுகபோகங்களைவிட எம் மண்ணின் அவலங்கள்தான் உனது பாதையை மாற்றின.

இயக்கத்தில் பகுதி நேர உறுப்பினனாகச் சேர்ந்து ஆரம்பத்தில் தீவிரமான உழைக்த நீ நாளடைவில் இயக்கத்தின் முழு நேர அங்கத்தவனாகிறாய்; ஒரு சிறந்த சாரதி நீ

தொண்டமானாறு இராணுவத்துடன் தான் உனது மோதல்கள் கூடுதலாக நடக்கும்.

வடமராட்சியை இராணுவம் கைப்பற்றவிடாமல் கூடியளவு முயற்சித்தோம் ஆனாலும் ஒரு இறுதிக்கட்டப் போருக்குரிய நிலையில் அந்தத் தாக்குதல் நடந்தபடியால் நாம் தற்காலிகமாகப் பின் வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் வடமராட்சி மண்ணை இழந்த வேதனை எம்மை தியாகத்தின் எந்தக் கட்டத்திற்கும் செல்லலாம் என்ற உணர்வை ஊட்டியது. அதற்கான சந்தர்ப்பம் கிடைத்த முதல் அதிஸ்டசாலி நீ! இயக்கத்தை நீ கௌரவித்திருக்கிறாய். இயக்கம் உனக்கு அந்தக் கௌரவமான சந்தர்ப்பத்தை அளித்துள்ளது எத்தனை பேர் போட்டியிட்டார்கள் அந்தச் சந்தர்ப்பம் தங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று சிறுத்த சாரதியான நீயே அதற்கான தகுதியைப் பெற்றாய்.

உனக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைத்ததும் நீ என்னிடம் வந்தாய். உண்மையான நட்பின் அடையாளம் நீ என்னைச் சந்திக்க வந்ததிலிருந்து புரிந்தது. ஆனால் என்னிடம் கூடச் சொல்லவில்லை. அந்தப் பாக்கியம் கிடைக்கும் முதல் ஆள் நீ யென்று! எனது மனதில் வேதனையுருவாகும் என நீ நினைத்தாயா! இல்லை அந்தச் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லையே என்று பொறாமைப்படுகிறேனடா

சம்பவதினம் தான் நீ தான் உள்ளே செல்லும் முதல் கரும்புலி என அறிந்து கொண்டேன் உனது சாதனைக்குரிய ஆரம்ப வேலைகளையும் நீயே மேற்கொண்டாய் சக்கைகளை அடைதல், அவற்றை ஏற்றுதல் எல்லாவற்றையுமே நீயேமேற்கொண்டாய். இறுதி நேரம் வரை உழைக்க வேண்டும் என்ற உன் மன நிலையை உணர்ந்து கொண்டேன்



கப்டன் மில்லர்

அன்று முழுக்க இயக்கத்தை விட்டு விலகிச் சென்ற எமது உறுப்பினர்களைபற்றி வேதனையுடன் கதைத்துக் கொண்டாய். ஒரு நல்ல நண்பனை ஆபத்தில் தான் தெரியும் என்பார்கள். இயக்கம் சோதனைகளையும், சவால்களையும் சந்திக்கும் நேரத்தில் எம்மை விட்டுச் செல்பவர்களை மக்கள் இனங்காணட்டும். எனது இழப்பு இவர்களுக்கெல்லாம் படிப்பினையாக இருக்கட்டும் என்னோடு சேர்ந்து பழகி எங்களை விட்டுப் பிரிந்தவர்கள் எல்லாம் மனச்சாட்சியின் முன் குற்றவாளிகளாகக் கூனிக் குறுகி நிற்கட்டும் என்றெல்லாம் வேதனையுடன் சொன்னாய்.

கொஞ்ச நேரத்தில் அனைவரையும் கலகலப்பாக வைத்திருக்க வேண்டுமென்று நீ கொஞ்ச நேரத்தில் செய்த அட்டகாசம்! அவை என்றுமே மறக்க முடியாது! கொஞ்ச நேரத்தில் உடல்சிதறி, எலும்போ, சதையோ கிடைக்காமல் போகப் போகிறோமே என்ற ஒரு சிறுகலக்கமும் கூட உன் முகத்திலோ, செயலிலோ காண முடியவில்லை, எல்லோரையும் விட உற்சாகமாக இருந்தவன் நீயே! திட்டப்படி இப்படித்தான் போக வேண்டுமென்றதும் நான் இதை விட இன்னும் கூடத் தூரம் போவேன் என்றாய். உனது சாவு நிச்சயமானது என்பதனால் உனது பொக்கற்றினுள் இருந்த காசை எடுத்து அருகே நிற்றவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றாய். அந்த நேரத்தில் அதை வாங்குபவர்களின் மனம் வேதனையடையக் கூடாது என்பதற்காக 'இயக்கத்தில் கொக்கோ 'கோலா குடிக்கத் தடை, ஆனால் நான் வந்ததும் குடிப்பதற்கு நாலு கொக்கோ கோலா வாங்கி வையுங்கள்'' நான் வந்து குடிப்பேன் என்றாய். நீ வந்துவிடுவாய் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். அந்த நேரத்தில் உனது முடிவு எப்பவும் உனக்குத் தெரியும்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

தொடர் நவீனம்

# மீண்டும் புதிதாய் பிறப்போம்

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

## அத்தியாயம்: 3

இளம் காலை வெய்யில் உயரமாக வளர்ந்திருந்த மாமரங்கள், மகிழமரங்களை ஆர்வமுடன் தழுவிக்கொண்டு இருந்தது அதனுல் அடர்த்தியான மரங்களின் கிளைகளைத் தாண்டி தரையைத் தொட முடியவில்லை.

கோயிலின் வெளிப்புறவீதி வெள்ளை மணலில் ஆடை கட்டியிருந்தது. மரங்கள நிழலினைக் கொடுத்தன. கூடவே குளிர்மையும் படைத்தன. வெள்ளைமணல் வீதிக்கு அப்பால் ஒரு புறத்தே நீண்ட மண்டபம் மறுபுறத்தே வேலிகளாக பனைமரங்கள் அணிவகுத்து நின்றன.

கால் புதையும் மணல் இதமாக இருந்தது. மரக்கிளைகளில் பதுங்கியிருந்த சிறு குருவிகள் ஆரவாரமாக கானமிசைத்தன பூந்தோட்டத்தில் இருந்த மல்லிகையின் வாசனை ரம்மியமானதொரு மனநிறைவைக் கொடுத்தது.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தோட்டங்கள் பசுமையும், கருமையுமாக பயிர்கள் குடியிருப்புகள் விழிகளுக்கு வியப்பைத் தரும். இயற்கையின் செழிப்புக்கள் இன்னும் அடக்குமுறையினுல் சீரழிக்கப்படாமல் அப்படியே இருந்தன,



எப்போதும் அமைதியும் அழகும் கொலுவிருக்கும் அந்தக் கோயில் பகுதியில் இப்போது எல்லாமே எதிர்மாருக இருந்தன. வனப்பையும் வசந்தத்தையும் ரசிக்கும் மனோ நிலையில் அங்கு யாரும் இல்லை.

தேர்த்திருவிழாவும் அல்ல, விடிய விடிய நடக்கும் இராத் திருவிழாவும் நடக்கவில்லை. ஆபாசக் கதை பேசும் வில்லுப்பாட்டோ கோமாளிக் கதை சொல்லும் கதாப்பிரசங்கமோ இல்லை. போட்டித் திருவிழா என்று சொல்லி வீடியோவும் எடுக்கவில்லை.

என்றுலும் சனங்கள் கூடியிருந்தார்கள். மரநிழல்களில் கோயில் மண்டபத்தில் வீதியில் இருந்த நீண்ட மண்டபதில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பெரியவர்கள்.

நகைகள் பளீரிடவில்லை. பட்டுக்கள் பளபளக்கவில்லை சாபபோவில் முழுகிய தலைமயிர்க்கற்றைகளும் பறக்கவில்லை அவற்றில் கனகாம்பரங்களோ, ரோசாககளோ பூக்கவில்லை. தோளில் மடித்துப் போட்ட சங்கிலிகளுடன் ஆண் பக்தர்கள் பவனிவரவும் இல்லை.

அவர்கள் வெகுவாக நொந்து போய் இருந்தார்கள். அழுக்கேறிபோன உடைகள் வெறுமையான கழுத்துககள் முகங்களில் சோகம் மனங்களில் மட்டுமல்ல கைகளிலும் சுமைகள். எதிர்காலத்துடன் அன்றைய பொழுதுகூட கேள்விக் குறியாக,

ஆண்டாண்டுகாலமாக பிறந்து வளர்ந்து எந்த மண்ணில் புரண்டு விளையாடி புழுதியின் வாசனை குடித்து எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளை விதைத்து அறுவடைகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்களோ அந்த மண்ணையும் ஏனைய உடைமைகளையும் இழந்து,

கால்கடுக்க நடந்து நிகழ்காலத்தை மாத்திரம் அல்ல எதிர்காலக்கனவுகளைக் கூட மிதித்து வியர்வையில் குளித்து அச்சமும், அவலங்களும் அவர்களை மிரட்ட உடலும் உள்ளமும் நன்றாக களைத்துப் போன நிலையில் சொந்தமண்ணிலேயே அகதிகள் என்ற பெயரோடு வந்துள்ளனர்.

அந்தக் கண்கள் கலங்கும் காட்சியைப் பார்க்க கண்களால் முடியவில்லை. நடந்த சம்பவங்களைக் கேட்க செவிகளால் இயலவில்லை. பாரம்பரியமாக அடக்குமுறையாளர்களின் அடக்குமுறைக் கலைகளில் இவை ஒன்றும் புதினங்கள் அல்ல என்றுலும் வேதனைகளையும் துயரங்களையும் சந்திப்பதென்பது இயலாத காரியம் தான்.

கோயில் போன்ற பொது இடங்கள் இப்போதுதான் தங்கள் உண்மையான பணியினைச் செய்கின்றன. கோயில் சுற்றுப்பிரகாரமெங்கும் அகதிகள் நிரம்பியிருந்தனர்.

பக்தி என்றுசொல்லிவேஷம் போடடுக்கொண்டு வணங்குவதாக பாவனை செய்பவர்களையும் திருவிழக் காலததில் மாத்திரம் நவநாகரீக பக்தர்களைக் கொண்டு விளங்கும் கோயில்கள் திக்கற்று வந்தவர்களுக்கு உறைவிடமாக மாறியுள்ளதும் வேடிக்கையான விடயங்கள் அல்ல.

மரநிழலில் அனேகம் பேர் ஆறுதலாகப் படுத்திருந்தார்கள். தாய்மார்கள் பலர் கோயில் முன் மண்டபத்தில் குழந்தைகளை தூங்கச்செய்து விட்டு ஓய்ந்திருந்தார்கள் தற்காலிக ஆறுதல் அடைந்திருந்த பிள்ளைகளும் சோம்பியிருந்தனர்.

கோயில் கிணத்தடியிலும் பைப்படியிலும் அனேகம் பேர் முகம் கழுவிக்கொண்டும் குளித்துக்கொண்டும் இருக்க வேறு பலர் அதற்காக காத்தும் இருந்தனர்.

இவர்களுக்கு இடையே ஊரின் பிரஜைகள் குழு முக்கியஸ்தர்களும் அகதிகளுக்கு உதவும் சங்கங்களின் அமைப்பாளர்களும் எம்கடன் பணி செய்து பெயர் பெறுவதே என்ற நல்ல நோக்கோடு உற்சாகமாக உலாவிக் கொண்டிருந்தார்கள். ஏனைய உணவு, தேனீர் போன்றவற்றுக்கான ஒழுங்குகளும் ஏற்பாடாகிக் கொண்டிருந்தன.

அந்த ஊரின் ஊடாகச் செல்லும் பிரதான வீதியில் இருந்து சில நிமிடங்களில் நடந்து போகக்கூடிய தூரத்தில் கோயில் இருந்தது, குடிசனம் நெருக்கமான அந்தப் பகுதி, அந்தப் பகுதியென்ன ஊரே குடாநாட்டின் மத்தியில் இருந்தபடியால் சமகால அவலங்களின் கொடுமைகளைப் பெரும்பாலும் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லை.

வேட்டுச் சத்தங்கள், செல்லடிகள் எல்லாமே தூரங்களில் தான் கேட்கும். வானத்தில் இருந்து ஏதும் வட்டம் போடதவரை சங்கடங்கள் எதுவும் இல்லை பிறகென்ன எல்லாரும் சந்தோசமாக இருந்தார்கள்

வீடு உடைபடுவது வேலிகள் எரிவது கூரையை செல்துளைப்பது. குண்டர்கள் கொள்ளையடிப்பது, குண்டடிபட்டுச் சாவது எல்லாவற்றையுமே பத்திரிகைச் சேய்திகளில் பெரிய எழுத்துக்களில் மாத்திரம் பார்த்து சில வேளை கவலைப்பட்டதோடு சரி நாளாந்த கடமைகள் ஒழுங்காக எல்லாமே நடக்கின்றன. எந்த விதமான குறையும் இல்லாமல்.

மாகாணம் விட்டு மாகாணத்திற்கும் மாவட்டத்தில் இருந்து மாவட்டத்திற்கும் அகதிகள் போய் கொண்டிருப்பதை அறிந்த ஊரவர்கள் ஊர்விட்டு ஊர்வரும் அகதிகளை இப்போது தான் பார்த்தனர்.

சந்திகளில் கோயில் வெளி மண்டபங்களில் பேப்பர் கடைவாசல்களில் எந்தவித குறையும் இல்லாமல் ஆண்களும் கோவில் உள் மண்டபங்களிலும், செத்த வீடுகள், கலியாண வீடுகள் போன்றவற்றில் பெண்களும் இவை பற்றிக் கதைத்த காலம் போய், அவர்கள் மத்தியிலே அகதிகள் வந்து விட்டார்கள்

ஊரில் வசதியுள்ளவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். மண்ணைக் கொத்தி செம்பாட்டு மண்ணுடன் போராடி பயிர் விளைவித்து பணம் சேர்த்தவர்கள் என்று தேடினுலும் கிடைக்க மாட்டார்கள்.

வியாபாரசகடஒட்டத்திற்கு பலியாகும் தோட்டக்காரர்களுக்கு பஞ்சமில்லை. பஞ்சமும் அவர்களை விடவில்லை எல்லோரும்வெங்காயமோ, புகையிலையோ நட்டு தண்ணீர் விட்டு பலன் தேட அவற்றின் விலைகள் சரியும்

விலைகள் விழுந்தால், எல்லோருமே வெங்காயத்தையும் புகையிலையையும் கைவிட்டு வேறு பயிர் நட வெங்காயமும் புகையிலையும் விலையேறும் மீண்டும் பழைய குருடிகள் பழைய கனவுகள்.

இன்ன காலத்தில் இவ்வளவு செய்வோம் இத்தனை பரப்புக்களில் என்று யார் சொல்லுவார்கள். பேசுவதும் தமிழ், வாழ்வதும் தமிழர் பிரதேசம எனின் ஆட்சியாளர்களுக்கு இவை கழிக்க முடியாத துடக்கல்லவா?

பாடசாலையை விட ரியூட்டரிகளில் அக்கறையாகப் படிப்பிக்கும் சில ஆசிரியர்கள் மக்கள் சேவையையே கருத்தாகக் கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்கள். முதலாளிகளுக்கு விசுவாசமான கடை ஊழியர்கள், கம்பனிகளில் கடமை புரிபவர்கள் என்று அங்கும் இங்குமாக சில மாதச்சம்பளகாரர்கள் இந்த மாதக் கடனை அடுத்த மாதம் தீர்ப்போம் என்று வாழ்நாள் பூராக வாடி வதங்குபவர்கள்.

சுருட்டுச் சுற்றுபவர்கள், நாட்கூலிக்கு போகின்றவர்கள் சிறு வியாபாரிகள், சந்தை வியாபாரிகள் என்று நாளந்த வாழ்க்கையையே கொண்டு நடத்தவே சங்கடப்படும் பாட்டாளி வர்க்கத்தினர் பெரும்பாலானோர்.

என்றுலும் வசதியுள்ளவர்கள் சிலபேர் இருக்கத்தான் செய்கின்றுர்கள். ஏமாற்றுக ஏஜன்சிகள். வெளிநாட்டில் உள்ளவர்களின் உதவிகள் சிலவருடங்களுக்கு முன்னர் வெளிநாடுபோக இருந்த அனுகூலங்கள் காரணமாக போய் சேர்ந்துவிட்ட பிள்ளைகளின் காரணமாக ஒரு சிலருக்குப் பிழையில்லை

இவர்கள்எல்லாம்இடைக்காலத்தில் முளைத்தவர்கள், இவர்களைவிட பரம்பரை பரம்பரையாக பெருந்தொழில்கள் செய்பவர்கள்வெளியூர்களில் முதல் போட்டு வியாபாரம்புரிபவர்கள்மில்முதலாளிகள் விமானங்களில்இடங்களை ஒதுக்கீடுசெய்து வைத்துள்ளோம் காசுகட்டிய அடுத்த கணமே வெளிநாடு அனுப்புவோம் என நம்பிக்கை ஊட்டும் விளம்பரங்களைச் செய்யும் வெளிநாட்டு ஏஜன்சிகள்.

எல்லோரும் இருக்கின்றுர்கள். தங்கள் தங்கள் நோக்கங்களில் குறியாக ஏன் இந்தக் கஷ்டம் எதனுல் இந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மண்ணையும் கொத்தி ஏன் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை என்ற சிந்தனை இல்லாமல் பணக்காரத்தனமான சிந்தனைகளுடன் மேல்தட்டுக் காரர்களைப் பார்த்து அவர்களைப் போல வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடன் கஷ்டப்பட்டவர்களையும்.

தில்லுமுல்லுச் செய்து உழைப்பில் ஒரு பகுதியைக் கோயிலுக்கு செலவழித்து புண்ணியம் தேடியும், எதிர்த்து புறப்படுபவர்களை பணத்தால் மடக்கியும் சாமளித்து விடலாம் என்றும் நம்பியிருக்கும் மேல் மட்டத்தவர்களையும்.

கஸ்டப்பட்ட மக்களிடையே தோன்றி காலத்திற்கு ஏற்ற மாதிரி சங்கங்களையும் சபைகளையும் உருவாக்கி மேல் மட்டத்தவர்களை சந்தோஷப்படுத்தி அவர்கள் மனம் அறிந்து விழாக்களையும், ஏனைய கொண்டாட்டங்களையும் நடத்தி தாங்களும் பிழைத்துக் கொள்ளுபவர்களையும் விட்டால் ஊரில் மிஞ்சுவது யார்.

தீவிரமாகச் சிந்திப்பவர்களையும், இந்த இழி நிலைகளுக்கு காரணங்களை தேடுபவர்களையும் ஒழுங்காகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும் என விரும்புகின்றவர்களையும், ஆகயத்தில் கோட்டை கட்டாவிட்டாலும் பரவாயில்லை. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தால் போதும் என்று நினைப்பவர்களையும், என்னைப் போலவே மற்றவர்களுக்கும் எனக்கு கிடைப்பனவே அவர்களுக்கு கிடைக்க வேண்டும் எனவும் யோசிப்பவர்களும் இல்லாமல் இல்லை.

ஆனுல் இவர்களை யாருக்கு தெரியும்? இவர்கள் மேடை ஏறி அரசியல் பேசினுல் ஒரு வேளை இவர்கள் பின்னுல் ஆட்கள் வரக்கூடும். முப்பது வருடங்களாக செய்து வருவதை செய்யவும் முனைவார்கள்.

இத்தகையவர்களில் ஒரு சில இளைஞர்கள்தான் புறப்பட்டுப் போய் விட்டார்கள். பேசிக் கொண்டும், யோசித்துக் கொண்டும் இருந்து பலனில்லை என்பதை தீர்க்கமாப் உணர்ந்து இந்த மண்ணில் பொருளாதார சமநிலை அரசியல் சமநிலை என்பன பேணப்பட வேண்டும் என்பவர்களுடன் சேர்ந்து விட்டார்கள். சேர்ந்து கொண்டும் உள்ளனர்.

இந்த மண்ணில் வாழ்பவர்கள் உரிமை உள்ள மக்களாக வாழவழிகோல சொந்தப் பிரதேசமெங்கும் சோர்வில்லாமல் கால் தடங்களைப் பதித்திட பாதை வகுத்திட அணிதிரண்டவர்களுடன் ஊரின் அந்த ஒரு சிலர் சங்கமமாகி விட்டார் கள்'

ஊரில் இரண்டு சந்தைகள், மூன்று பாடசாலைகள், ஆஸ்பத்திரி, மினித் தியேட்டராக மாருமல் கட்டிடமாகவே இருக்கும் படங்கள் திரையிடப்படாத சினிமாத் தியேட்டர், புகையிரதத்தைச் சந்தித்து பல காலமாகிவிட்ட புகையிரத நிலையம் தூர்ந்துபோன அதன் பிளாட்ப்பாம, மிஷன் ஆஸ்பத்திரி, பெரிய கோயில்கள் பல, எண்ண முடியாது குறிச்சிக்கு ஒன்ருக இருக்கும் சிறு கோயில்கள் மட்டுமா?

எப்போதாவது முத்திரைகள் விற்கும் தபாற்கந்தோர் ரொட்டிக் கடைகளும், சில்லறையாகச் சாராயம் விற்கும் கடைகளும், சங்கக் கடைகளும் கொண்ட கடைத்தெரு எந்த நாளப் பார்த்தாலும் வயது வந்தவர்களுக்காக மட்டும் படங்கள் காட்டப்படும் மினித்தியேட்டர்கள், மினித்தியேட்டர் போல ஆடை அணியும் தமிழ்க் கதாநாயகிகளின் மிச்சமாகத் தெரியும் உடம்பினைக் காட்டும் போஸ்டர்கள் ஒன்றுக்கும் குறைவில்லை.

ஊரில் உள்ள எல்லாக் கோயில்களிலும் அகதிகள் சேர்ந்து விட்டார்களோ தெரியவில்லை. பிரதான வீதிக்கு மிகக் கிட்டவாக இருக்கும் இந்தக் கோயிலில் மாத்திரம் அகதிகள் பெருமளவு சேர்ந்து விட்டார்கள்'

கனகசபையர் வீட்டுக்குள் பச்சைத் தண்ணீர் கேட்டுப் போன கண்மணி அங்கு கனகசபையரின் அன்பான கோப்பி, உபகாரத்தின் பின்னர் விடைபெற்று கோயிலடிக்கு வந்த போது வேதனையாக இருந்தது.

பிள்ளைகளே இல்லாமல் சிறு வயதில் விதவையாகிப் போய் விட்ட தன் மகள் புவனம் தன் மகன் கந்தவனத்தைப் பறி கொடுத்துவிட்டு மூன்று பிள்ளைகளுடனும் கண்கலங்கும் மருமகள் சரஸ்வதியையும், போல எங்கள் பிரதேசமும் பாழ்பட்டுப் போய் விட்டதே என யோசிக்கும்போது தீரமுடியாத கவலை உண்டானது.

இனசனம் உள்ளவர்களும், வசதியுள்ளவர்களும், தெரிந்த இடங்களுக்கு போய் விட்டார்கள். எங்களைப்போல கஸ்டப்பட்டதுகளுக்குத் தான் இப்படி கோயில்களும், பள்ளிக்கூடங்களும் தங்குமடங்களாக அமைகின்றன.

சோதனைகள் வரும் போது கூட கஷ்டப்பட்டவர்களுக்கு ஒரு விதமாகவும் வசதியுள்ளவர்களுக்கு ஒரு விதமாகவும் வருகின்றன எனவும் கண்மணி யோசித்தாள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# அத்தியாயம் 27

புதன், சந்திரனிலும் சற்றும் பெரியது. வியாழனின உபகிரங்கங்களான கனிமீட், கலிஸ்ரோ ஆகியவற்றிலும் சிறியது. சிறியது சூரியனுக்கு அண்மையில் இருக்கும் காரண தினலும் மிகச் சிறியதாக இருக்கும் காரணத்தினலும், இதனை மற்றக் கிரகங்களை அவதானிப்பது போல அவதானிக்க முடியாது. சூரியனுக்கும் புதனுக்கும் இடையில்



உள்ள கோணம் 30° யிலும் குறைந்தது. மாலையில் மேற்கிலோ அல்லது காலையில் கிழக்கிலோ அடிவானத்தில் இது தெரியக் கூடிய ஆகக்கூடிய உயரம் சுமார் 30° (மேற்கே அடிவானத்தில் தெரியும் நாட்களில் இதனைக் கிழக்கிலே காணமுடியாது. அதே போல் கிழக்கில் தெரியும் சொட்களில், மேற்கிலோ தெரியாது.

உச்சிக்கும் அடிவானத்துக்கும் இடையில் உள்ள கோணம் செங்கோணம் 90°. இதில் சுமார் 1/3 பங்கு உயரத்துக்கு மட்டுமே புதன் வரும் புதன் அடிவானத்தில் ஆகக் கூடிய உயரத்தில் தெரியும் போது. பூமியிலிருந்து புதனை நோக்கி நாம் பார்க்கும் ரேகைக்கும் புதனில் இருந்து சூரியனை நோக்கி உள்ள ரேகைக்கும் இடையில் உள்ள கோணம் 90° ஆக இருக்கும் புதனையும் பூமியையும் இணைக்கும் ரேகைக்கும் இடையில் உள்ள கோணம் 30° ஆக இருக்கும். இவற்றைக் கொண்டு திரிகோண வியலின் படி சூரியனிலிருந்து புதன், பூமி இரண்டுக்கும் உள்ள தூரத்தைக் கணித்தவர்களை ஒருபக்கப் பகல், மறுபக்கம் இரவு என்ற கருத்து நிலவிய போதே, இரவுப் பக்கக்குளிர் அப்படி ஒன்றும் பயங்கரமான உறைபனிக் குளிர் அல்ல என்றும் சாதரணமாக வீட்டின் அறையில் காணப்படும் உஷ்ணம் போன்று சுமார் 70°F ஆக இருக்கலாமென வும் அறிந்தார்கள்.

இந்தத் தகவல் ஒரு புதிர் போல இருந்தது. புதனின் ஒருபக்கம் சதா இருளாகவே இருக்குமானல், அந்தப்பக்கம் எற்கெனவே விளக்கிய படி அதிகக்குளிருடையதாக இருக்க வேண்டும். அப்படி இன்றி அந்தப் பகுதியின் 'உஷ்ணநிலை 79°F ஆகஇருப்பதற்கு மிக அதிக அளவான உஷ்ணம் அங்கே கொண்டு செல்லப்பட வேண்டும்.

புதனில் அடர்த்தியான சூழல் இருக்குமேயானல் அதிக அளவு உஷ்ணத்தை, மறுபக்கதுக்குக் கொண்டு செல்வது ஓரளவுக்குச் சாத்தியமாகலாம்புதனின் சூழலோ அவ்வளவு அடர்த்தியானது அல்ல. பூமியின் சூழலிலும் பார்க்க. புதனின் சூழல் ஆயிரத்தில் ஒருபங்கு அடர்த்தியுள்ளது. இதற்கு மேலே இருக்க முடியாது எனவும் கருதுகிறார்கள். அங்கே உள்ள மிகத் துல்லியமான- நொய்தான- சூழல் கூட, அசாத்தியமான அசுர வேகத்தில் மறுபக்கத்துக்குச் சென்றால் மட்டுமே, அப்பகுதியின் உஷ்ணம் 70 F° ஆக இருக்க முடியும். அடர்த்தியான சூழலுமின்றி, அதி வேகத்திலே சூழல் பிரயாணம் செய்யவும் முடியாத நிலையில் புதனின் இரவுப் பக்க உஷ்ணம் எப்படி 70°F ஆக இருக்க முடியும் என்பது புரியாத புதிராக இருந்தது.

இந்தப் புதிர் 1965ல் விடுவிக்கப்பட்டது. போற்ரோறிக் கோவில், அரோபியா என்ற இடத்தில் அமைக்சப்பட்டிருக்கும் பிரமாண்டமான ரேடியோ தொலைநோக்கி தோன்றிய சமயத்தில் இருந்திருந்தாலும் கூட அது மிக மிகக் குறுகிய காலத்திலேயே சூரியனின் உஷ்ணம் மிகுந்த கதிர்களினல் கலைந்து விண்வெளியில் வெகு தூரம் சென்றிருக்கும் இப்போது புதனிலே காணப்படும் மிக மெல்லிய துல்லியமான சூழல் கூட அங்கே நிரந்தரமாக நிலைத்திருக்கும் சூழல் அல்ல. புதனின் உட்பகுதியிலிருந்து வெளியில் வந்த வாயுக்களினலான சூழலாக அது இருக்க வேண்டும். இந்த வாயுக்கள் கனத்த வாயுக்களாகவும் இருக்கலாம் விண்வெளியிலே விரைவில் தப்பிச் செல்ல முடியாத அளவுக்கு சற்றுக் கனமான வாயுக்களாக அவை இருக்கலாம்.

அகச் சிவப்பு ஒளிவண்ணத்தில் மெல்லிய கரியமிலவாயு. இருப்பதை அவதானித்தார். புதனுடைய மேற்பகுதிச் சூழலின் உஷ்ணத்தில் கரியமில வாயுவும் ஆர்கன் வாயுவும் தப்பிச் சென்று விடும். கரியமில வாயு அங்கே காணப்படுவதாக இருந்தால் அது புதனின் உட்பகுதியில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கிறது என ஊகிக்கலாம்

ஒன்பது கிரகங்களிலே புதனும் புளூற்ரோவும் எதிர் எதிராக வெகு தூரத்தில் இருந்தாலும், இரண்டுக்குமிடையிலே சில ஒற்றுமைகள் உள்ளன என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். இந்த ஒற்றுமைகள், இவற்றின் உருவ அமைப்புடன் தொடர்புடையவை. ஆனல், இவற்றின் சரித்திரத்தைப் பொறுத்தவரை, மிக வித்தியாசம் உண்டு. புளூற்ரோ கண்டுபிடித்து 1930- ஆம் ஆண்டில் ஆகவே, அதனுடைய சரித்திரம்—எங்களைப் பொறுத்த வரை—சுமார் ஐம்பத்தி ஏழு (1987-ல்) வருடங்கள் தான். ஆதிகாலத்திலேயே, மனிதன் அறிந்திருந்த கிரகங்கள் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி என்பவை மட்டுமே.

## புதனின் ஒரு வருடம் 88 நாள்

மூலம் புதனின் சுய சுழற்சிக் காலத்தை அளவிட்டு, அது சுமார் 59 நாட்கள் எனக் கணித்தார்கள். இதன் மூலம், புதனின் இரவு நீண்ட இரவே யன்றி நிரந்தர இரவு அல்ல என்ற உண்மை நிரூபிக்கப்பட்டது. பூமியின் துருவப் பிரதேசங்களில் ஆறு மாதம் நீண்ட இரவும் ஆறு மாதம் நீண்ட பகலும் காணப்படுவதைப் போலவே, புதனிலும் நீண்ட பகலும் நீண்ட இரவும் உண்டு. புதனிலே, ஒரு வருடம் என்பது 88 நாட்கள் இரண்டு வருடத்துக்கு ஒரு முறைதான், அங்கே சூரியன் உதிக்கும்! நம்ப முடியவில்லையா?

### புதனின் அஸ்தமனம்!

சூரியனை நாயகமாகக் கொண்ட கிரகங்கள் என்பதில் புதன் அதற்கு மிக அண்மையில் உள்ளது. புதனின் உயிர்கள் தோன்றுவதற்கோ - வாழ்வதற்கோ ஏற்ற சூழ்நிலை இருக்க முடியாது உயிர் தோன்றுவதற்கு இன்றியமையாத ஹைட்ரஜன் சூழல் புதனிலே ஒரு சமயத்தில் அது

தானுக இயங்கும் விண் ஆராய்ச்சிக் கலங்களைப் புதனுக்கனுப்பி ஆராய்ந்தால் புதனிலே விண்கற்கள் விழுந்த காரணத்தினல்ஏற்பட்ட மேடு பள்ளங்கள் இருப்பதை அவை அறிவிக்கக் கூடும் சந்திரனில் உள்ள மேடுகள் பள்ளங்களைப் போன்று புதனிலும் இருக்கும் குறிப்பிடத்தக்க விசேஷநிகழ்ச்சி எதுவும் இடம் பெருத பட்சத்தில் புதன் ஒரு சிறிய அழகற்ற யாரும் எதுவும் வாழாத வரண்ட பாலைவன உலகமாக இருக்கும். மனிதன் ஆராய்ச்சியின் பொருட்டாகக் கூட அங்கே செல்ல மாட்டான் புதனிலே இப்போது இருக்கக் கூடிய வாயுக்கள் இரண்டு ஒன்று ஆர்கன்; மற்றது கரியமில வாயு. பொற்ருஸியம் என்னும் மூலகம் கதிரியக்கத்தின் காரணத்தினல் ஆர்கன் வாயுவாக மாறிக் கொண்டிருக்கக்கூடும். இது ஒரு கனமான வாயு. ஆதலால் ஒளிவண்ணக் கருவியிலே இதனை அவதானிக்க முடியாது சில வருடங்களுக்குமுன் சோவியத் விஞ்ஞானி, V. I மொரோஸ் என்பவர் புதனின்

### உடுவில்
### விவியன் நவசிவாயம்

இதுவரை புதனைப்பற்றிச் சில வாரங்களாகக் கூறினேம். அடுத்த கட்டுரையில் இருந்து வீனஸ் என்ற வெள்ளியைப் பற்றித் தொடர்ந்து பார்ப்போம்.

— ● —

---

## வரலாற்றுக் கோலம்

யாழ்ப்பாணத்துக்கு உணவு கொண்டு வந்த இந்தியக் கப்பலை இலங்கைக் கடற்படை வழி மறித்தது. செத்தாலும் இந்தியக் கப்பல்கள் வர அனுமதிக்க மாட்டோம் எனச் சூளுரைத்தனர் அமைச்சர்கள். இப்போது ஒன்றின் பின் ஒன்ருகக் கப்பல்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து கொண்டே இருக்கின்றன. ஆருவது கப்பலுடன் வர விட மாட்டோம் எனப் பிரதமர் பிரேமதாசா சூளுரைத்து உள்ளார். இது ஒரு பக்கம் இருக்க புதிய கண்டு பிடிப்பு ஒன்றினைச் ஸ்ரீமான் அத்துலத் முதலி கண்டு பிடித்திரு கின்றூர். அது என்ன தெரியுமா?

இப்போது இறக்கப்படும் பொருட்களில் எக்கச்சக்கமான தீப்பெட்டிகள் இருக்கின்றனவாம் இவ்வாறு எக்கச்சக்கமான தீப்பெட்டிகளை இங்கு இறக்குமதி செய்வதால் உள்ளூர்த் தீப்பெட்டிகளின் உற்பத்தி பெருமளவு பாதிக்கப்படப்போகின்றது! இதுவே பா. ப. அமைச்சர் ஸ்ரீமான் அத்துலத்முதலியின் குற்றச் சாட்டு!

வட பகுதியில் அவ்ரோ விமானம் போட்ட தீக்குண்டுகளால் நூற்றுக்கணக்கான வீடுகள் ஏற்கனவே எரியுண்டு விட்டன. இவ்வாறு அத்துலத் முதலி அவர்களின் வானரப் படை ஏற்கனவே தீப்பெட்டி இல்லாமல் வீடுகளை எரித்து விட்டன. இவ்வாறு வீடுகளை எரித்துத் தமிழ் மக்களை அனுதைகளாக ஓட்டம் காட்டிய அமைச்சர் இந்த மக்களிடம் தீப்பெட்டி 'பிஸ்னஸ்' செய்யும் மனப்பான்மையை நினைத்து அழுவதா சிரிப்பதா என்பதே புரியவில்லை.

இது இவ்விதம் இருக்க, தெற்கில் இருந்து வரும் தீப்பெட்டிகள் இப்போது குச்சைக் கீறியவுடன் சிறிய வெடியோசையுடன் வெடிக்கின்றன. இதுவும் இலங்கை அரசாங்கத்தின் சாதனை தான்!

முதலியார் படைகளின் பொக்கட்டில் ஒவ்வொரு தீப்பெட்டியும் இருக்கின்றது இத் தீப்பெட்டிகள் வேலிகள், வீடுகள் என்று பாராது தீயிட உதவி புரிகின்றது. இப்போது அகதி மக்களுக்குச் சமையல் வேலை செய்வதற்குப் பயன்படுவது இந்தியத் தீப்பெட்டிகளே!

முதலியாருக்கு விளங்குமோ என்னவோ?

தீக்குச்சி தலையால் தன்னை அழித்துக் கொள்கின்றது முதலியாருக்கும் இந்தக் கதியே என மக்கள் கதைத்துக் கொள்கின்றூர்கள்.

★ ★ ★

பிரதமர் பிரேமதாசா இங்கிலாந்து சென்று பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சரைக் கண்டுள்ளார். அங்கு இந்தியா யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலங்கள் போட்ட விசயத்தைப் பற்றி அழுது வடித்திருக்கின்றூர். அப்படியா சங்கதி உங்களின் அனுமதியில்லாமல் அப்படி இந்தியா செய்திருந்தால் அது இறைமையை மீறிய செயல் என திருமதி மார்க்கிரட் தட்சர் சொன்னதாகவும் இலங்கை வானெலி அழுது புலம்பியிருக்கின்றது.

தெரியாமல்தான் கேட்கின்றேன்! ஒரு நூற்ருண்டுக் காலம் இந்தியாவைப் பிரிட்டன் கைப்பற்றி ஆட்சி செய்தது. இந்தியாவைக் கேட்டா பிரிட்டன் அதைக் கைப்பற்றி ஆட்சி புரிந்தது?

★ ★ ★

ஹிட்லரையும், ஜே ஆரையும் ஒப்பிடுமிடத்து ஜே ஆர் ஹிட்லரை மிஞ்சி விட்டார். ஹிட்லர் நூலகங்களை எரித்தது இல்லை. ஹிட்லரால் அழிக்கப்பட்ட ஒரு இனத்தின் மூளையை வைத்துத் தனது நாட்டின் குடிமக்களை அழிப்பதற்குத் திட்டங்களை வகுத்தவர் ஜே.ஆரே!

தமிழ் மக்கள் எல்லோரும் பயங்கரவாதிகள் அல்ல என்பார். இருப்பினும் குடி மக்கள் வாழும் இடங்களுக்கும் பொம்மர் விமானங்களையும் 'ஷெல்' குண்டுகளையும் ஏவி விடுவார். தமிழ் மக்கள் தமது புதைகுழிகளைத் தாமே வெட்டி அதற்குள் மரணத்தைத்தழுவ வழிகாட்டியவர் ஜே. ஆர். இவ்வாறன கொடுங்கோலணகிய ஜே. ஆர். தருணம் வந்தால் அகிம்சைத் தத்துவத்தையும் மேடையேற்றுவார். பின்பு சில நாட்கள் கழித்து கோயில்களுக்கு குண்டுமாரி பொழிவார்.

இவ்வாறு முரண்பட்ட பாத்திரமே ஜே. ஆர் ஹிட்லரைப் பற்றி வின்சன் சர்ச்சில் பின் வருமாறு எழுதினர்.

''The Ferocious genius, the reposrtory and expression of the most virulent hatred that ever Corroded the human breast ''

வின்சன் சர்ச்சில் இப்போது உயிரோடு இருந்திருப்பாரேயானல் நினைத்துக் கவலைப் பட்டிருப்பார். இந்த வாக்கியத்துக்குக் ஹிட்லரை விடப் பொருத்தமான ஆள் ஜே ஆரே

★ ★ ★

தனக்குப் பிடிக்காதவர்களின் தலையை நன்கு மொட்டையடிப்பதில் பிரபல்யமானவர் ஜே. ஆர். ஐ. தே கட்சியில் பிரபல்யமான பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவைப் பற்றி ஒரு வார்த்தைகூட இவர் குறிப்பிடுவது கிடையாது.

இவர் நிதிமந்திரியாக இருந்தபோதும் மார்க்சியப் பூச்சாண்டியும் காட்டியவர் அப்போது அரசாங்க உத்தியோகத்தில் இருந்த நல்லையா, ஆசீர்வாதம், வைகுந்தவாசன், ரி பி. இலங்கரத்தின ஆகியோர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டார்கள். ஆயினும் இவர்கள் பிற்கால வாழ்வில் புகழுடனேயே வாழ்ந்தார்கள். ரி பி இலங்கரத்தின நிதி மந்திரியாக இருந்தார். வைகுந்தவாசன் தமிழ் ஈழம் பற்றி ஐ. நா வில் குரல் எழுப்பிப் புகழ் அடைந்தார்

ஜே. ஆரால் மார்க்சீயப் பூச்சாண்டி காட்டப்பட்டோர் முன்னணிக்கு வந்தது போல இன்று மார்க்சீயம் பூச்சாண்டி காட்டி விடுதலைப் போராட்ட வீரர்களைப் பயங்கரவாதிகள் என அழைக்கும் ஜே ஆர் அரசு அவர்களின் தியாகம் விடுதலையை வென்றெடுப்பதைக் கண்ணுல் கண்டே தீரும்

★★★★★★★★★★★

### அதிசயன்

★★★★★★★★★★★

ஆனையிறவு ஊடாகப் பிரயாணம் செய்த என்னை ராணுவம் வழி மறித்துக் கையை உயர்த்தச் சொன்னது நானே கையை உயர்த்தினேன். ''நீ கொட்டி இல்லைப் போகலாம் கொட்டியைக் கண்டால் தகவல் தரவேண்டும்'' என்று ராணுவம் எனக்குக் கட்டளையிட்டது

முகாமில் இருந்து கொஞ்சத் தூரத்துக்கு அப்பால் 5கொட்டியை நான் கண்டதாகச் சொன்னேன் அந்த ராணுவ வீரரோ சிரித்துக் கொண்டு பஸ்ஸக்குள் வந்தால் மாத்திரம் கொட்டிகளைச் 'செக்'பண்ணுவோம் என்ருர்.

எப்படி இருக்குது இராணுவத்தாரின் வீரதீரம்.

★ ★ ★

# சிறைகளில் தமிழர்களின்

சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்படும் கைதிகள் இரண்டு பிரதான பிரிவுக்குள் அடக்கப்படுவார்கள். ஒன்று அவர்கள் சமூக நலனைப் பாதிக்கின்ற வகையில் சட்ட அத்துமீறல்களைச் செய்த குற்றவியல் குற்றவாளிகள். இவர்களைப்



தங்கத்துரை

பொறுத்தவரை அவர்கள் தாம் செய்த தவறுகளைத் திருத்தி மீண்டும் அவர்கள் சமூக அங்கீகாரம் பெற்று வாழ்வதற்கு முன்னேடியாக அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் முகமாகச் சிறைச்சாலைகள் அமைக்கப்படுகின்றன.

அடுத்ததாக தாம் தமது உள்ளத்தில் கொண்ட கருத்திற்காக அல்லது தமக்கு சரியெனப்பட்ட ஒரு கொள்கை சித்தாந்தத்திற்கு செயல வடிவம் கொடுத்தமைக்காகவும் அக் கொள்கை சித்தாந்தங்களில் அதிகாரத்தில் இருப்பவர் உடன்பாடு கொள்ளாமையால் சிறைக் கைதிகளாக்கப்பட்ட கோட்பாட்டுவாதிகள் மனச்சாட்சிக் கைதிகளாகவும் சர்வதேசமெங்கும் வர்ணிக்கப்படுகிறார்கள். கூட்டு மொத்தமாகப் பார்க்கும் போது சிறைச்சாலைகளின் நோக்கம் உடல், உளரீதியான தண்டனைகளை வழங்குவதைவிட அவனுக்குப் புனர்வாழ்வு அளிப்பதையே நோக்காகக் கொண்டுள்ளன. ஆனல் இலங்கைச் சிறைகளில் தமிழ்க் கைதிகளின் நிலைமை மிக மோசமாகவே இருந்து வருகின்றமை கண்கூடு.

## தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை

தமிழ் அரசியல் கைதிகள் தமது கொள்கை கோட்பாடுகளுக்காக கைது செய்யப்படுவதும் அவர்கள்மீது மனித குலமே வெறுக்கதக்க அநாகரிகமான சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதும் இன்று சகஜமாகியுள்ளன. அண்மைககாலமாக சர்வதேச மன்னிப்புச்சபையால் வெளியிடப்



தாமு கந்தையா (புத்தூர்)

படும் அறிக்கைகளில் இவ்வாறான மிருகத்தனமான சித்திரவதைகள் அம்பலப்படுத்தப் படுததப்பட்டு இருக்கின்றன. தமிழ்க் கைதிகள் அடிக்கடி சிறைகளில் அகால மரணம் அடையும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இதில் அரசியல் காரணங்களுக்காக குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால கைதியாக்கப்படும் ஏதுமறியாத அப்பாவி மக்கள் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் என்னவென்பதையோ அவற்றை மறுத்து தாம் நிரபராதிகள் என்பதை நிரூபிக்க வாய்ப்புகள் அளிக்கப்படாமலோ அல்லது மறுக்கப்பட்டோ ஆண்டுக் கணக்காக சிறைகளில் அடைத்துவைக்கப்படும்போது கொல்லப்படுவதும் கொல்லப்பட்டபின் அவர்கள் தப்பியோடும் போது சுட்டுக் கொல்லப்பட்டானர் என்ற கூற்றும் ஒருபோலியுலாவடியில் இலங்கை அரசால் வெளியிடப்பட்டு வருகின்றன. பயங்கரவாதத் தடுப்புக் கூட்டத்தின் கீழ் நீதிவிசாரணையின்றி எந்தவொரு கைதியும் 18 மாத காலததிற்கு மேல் சிறைகளில் அடைத்து வைக்கப்பட முடியாது என்ற சட்ட ஏற்பாடுகள் இருக்கும் போது இன்று பூசாவிலும் வெலிக்கடையிலும் எத்தனையோ கைதிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எதுவித விசாரணையுமின்றி வைக்கப்பட்டுள்ளனர்.

## சிங்களக் குற்றவியல் கைதிகள்

சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றங்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட குற்றவியல் கைதிகள் (சிங்களவர்கள்) இன்று இலங்கைச் சிறைச்சாலைகளுக்குள் அடைக்கப்பட்ட நிலையில் அவர்கள் சிறைக்கு வெளியே இருந்தபோது செய்த குற்றங்களை விட மோசமான குற்றச் செயல்களை அரசின் அனுசரணையுடன் சிறைச்சாலைக்குள்ளேயே தமிழ்க் கைதிகள் மீது புரிந்து வருகிறார்கள். 1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளின் போது தமிழ் அரசியல் கைதிகள் 53 பேர் சக சிங்களக் கைதிகளால் அடித்தும் வெட்டியும் கொல்லப்பட்டார்கள். மிகக்கூடுதலான பாதுகாப்பு அரணைக் கொண்ட வெலிக்கடையில் இச்சம்பவம் நடைபெற்றமை ஏதும் முன்கூட்டியே திட்டமிடப்படாத ஒன்று அல்ல.

தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு ஒரு ஆயுதமாக (Tool) சிங்களக் கிரிமினல் கைதிகளை அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது. தமிழ்க் கைதிகள் மீதான பலாத்காரம் மற்றும் பாலியல் குற்றங்களுக்காக மட்டுமன்றி சிங்களக் கிரிமினல் கைதிகளுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து அவர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்றி நிலச் சூறையாடலையும் செய்து வருகின்றது. சிங்களக் கிரிமினல் கைதிகளுக்கு பயிற்சி கொடுத்து தமிழ்ப் பாரம்பரிய நிலத்தில் குடியேற்றும் செயலானது அரசின் முறறுமுழுதான ஒரு இராணுவ நடவடிக்கையேயாகும். இவ்வாறான சிங்களக் கிரிமினல் குற்றவாளிகள் ஊர்காவற் படைகளிலும் சேர்க்கப்பட்டு தமிழின விரோத நடவடிக்கைகளுக்காக இலங்கை அரசால் ஊக்கப்படுத்தப்பட்டுமுள்ளனர்.

## வெளிநாடுகளில் அரசியல் கைதிகள்

வெளிநாடுகளில் அரசியல் கைதிகளைப் பொறுத்தவரை அவர்கள் மனச்சாட்சிக் கைதிகளாகக் கருதப்பட்டு அரசி



குட்டிமணி

யல் கைதிகளுக்கான விசேட அந்தஸ்துக் கொடுக்கப்பட்டு விசேட சலுகைகள் அளிக்கப்படுகின்றன. வானொலி, பத்திரிகை போன்ற சகல தொடர்பு சாதன வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. எழுத்து சுதந்திரம் சிறையினுள் வழங்கப்படும். அவர்கள் தமக்கு விரும்பியவற்றை எழுதமுடியும். சிறைச்சாலை என்பது மக்களின் உடல்களின் நடமாட்டத்திற்கும் அசைவிற்கும் விதிக்கப்படும் தடையை நடைமுறைப்படுத்தும் கூடமேயொழிய அங்கு உள்ளங்களின் சிந்தனைக்கு எவராலும் எவ்வித கட்டுப்பாடும் விதிக்க முடியாது.

## சிறையில் உருவான நூல்கள்

வெளிநாடுகளில் உள்ள சிறைச்சாலைகளில் அரசியல் கைதிகளுக்கு கருத்துச் சுதந்திரம் கொடுக்கப்படுவதால் பல சிறந்த நூல்கள் அரசியல் தலைவர்களால் உருவாக்கப்பட்டன. அண்ணல் காந்தி அவர்கள் ஆங்கிலேயர்களால் சிறையில் அடைக்கப்பட்ட போது அவரால் எழுதப்பட்ட "SAMYAVADI" என்ற நூல் இந்தியாவின் எதிர்காலம் எப்படியிருக்க வேண்டும் என்ற அவரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு கருத்துப் பெட்டகமாக விளங்குகின்றது. முன்னாள் இந்திய ஜனதிபதி இராசேந்திரப் பிரசாத் அவர்கள் தமது சுயசரிதையை சிறையிலிருக்கும்போதுதான் எழுதினர். அமரர் நேரு அவர்கள் சிறையிலிருக்கும்போது தமது



சத்தீஸ்வரன் (அச்சுவேலி)

மகள் பிரியதரிசினிக்கு எழுதிய கடிதங்கள் (இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்) இன்று மிகப் பிரசித்தி பெற்ற ஒரு நூலாக விளங்குகின்றது. 1986-ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது தமிழாராய்ச்சி மகாநாட்டின் போது சிறையில் வாடிய 25 கவிஞர்களின் 63 கவிதைகளைத் தொகுத்து "சிறை தரும் தேன் கவிதை" என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

கீழைத்தேய இந்திய நாட்டில் மட்டுமன்றி மேலைதேய

**இலங்கையின் பல பாகங்களிலும் அரசியல் காரணங்களுக்காகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது முகாமிற்குள் வைத்துக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் பெயர் விபரம் பின்வருமாறு:- (இவையாவும் எம்மால் சேகரிக்கப்பட்ட தகவல்களே. இவை எந்தவகையிலும் பூரணமானதல்ல.)**

| திகதி | பெயரும் வயதும் | சொந்தஇடம் | கொல்லப்பட்ட முகாம் |
|---|---|---|---|
| 1979 ஜூலை13 | இன்பம் செல்வம் உட்பட 6 இளைஞர்கள் | நவாலி கல்வியங்காடு | யாழ் பழைய கச்சேரி இராணுவமுகாம் |
| 1983 மார்ச் | நவரட்ணராஜா | கிளிவெட்டி திருமலை | குருநகர் இராணுவ முகாம் |
| 1983 ஜூலை | 53 போராளிகள் | | வெலிக்கடை |
| 1984 டிசம்பர் 2ம் திகதி | 36 பேர் | சேமமடு | வவுனியா ஜோசப் இராணுவமுகாம் |
| 13. 1. 85 | 4பேர் | | பூசா தடுப்புமுகாம் |
| 8. 2. 85 | சுப்பையா இராமசாமி | வவுனியா | வவுனியாமுகாம் |
| 13. 3. 85 | வேலுப்பிள்ளை மகேந்திரன் | வல்வெட்டித்துறை | V. V. T இராணுவ முகாம் |
| 14. 8. 85 | 6 தமிழர்கள் | — | தங்காலைசிறை |
| 29. 9. 85 | இராசதுரை பாலச்சந்திரன் | — | திருமலை இராணுவ வைத்தியசாலை |
| 17. 11. 85 | 7 பேர் நஞ்சூட்டி கொலை | — | திருமலை இராணுவ முகாம் |
| 30. 11. 85 | ஜோன்சன் (ஜுனைதீன்) | ஒட்டமாவடி | கொழும்பு தலைமை இராணுவமுகாம் |
| 30. 11. 85 | ஜோசப் (நாசராஜா) | பொத்துவில் | கொழும்பு தலைமை இராணுவமுகாம் |
| 26. 12. 85 | 2 இளைஞர்கள் | — | அம்பாறை இராணுவமுகாம் |
| 7. 1. 86 | சண்முகம் தங்கராசா | — | திருமலை பிறெட்றிக் கோட்டை |
| 21. 1. 86 | ஜெகதீசன் | செங்கலடி | மட்டு பொலிஸ்நிலையம் |
| 31. 1 86 | கோபாலசாமி சிவபாலன் | — | வவுனியா முகாம் |
| 24. 2. 86 | சுப்பிரமணியம் திருக்குமாரன் | மூதூர் | திருமலை கடற்படை தளத்தில் வைத்து நஞ்சூட்டிகொலை |
| 20. 3. 86 | தர்மலிங்கம் உதயகுமார் (24 வயது) | பண்டாரிக்குளம் | வவுனியா முகாம் |
| 14. 2. 87 | மன்மதராஜா | செட்டிக்குளம் | செட்டிக்குளம் இராணுவ முகாம் |
| 6. 4. 87 | ஞானசேரம் உதயகுமார் (22) | ஆலங்கேணி | திருமலை கடற்படை தளம் |
| 5. 6. 87 | 9 தமிழ் இளைஞர்கள் | — | பூசாமுகாம் |
| 14. 6. 87 | 12 ,, ,, | — | பூசாமுகாம் |
| 21. 6. 87 | 4 ,, ,, | — | பூசாமுகாம் |
| 8. 7. 87 | 2 ,, ,, | — | பெலவத்தை தடுப்புமுகாம் |

# அகால மரணங்கள் அரசியல் படுகொலைகளே

நாடுகளிலும் சிறையில் வாடிய அரசியல் கைதிகள் நல்ல நூல்களை எழுத அவர்களுக்கு சிறைச்சாலை நிர்வாகம் இடம் கொடுத்தது. ஓ ஹென்றி (O Henry) என்ற புகழ்பெற்ற எழுத்காளர் தான் கொண்ட கருத்தின்காரணமாக சிறையில் அடைக்கப்பட்டபோது அவா சிறைக்குள் இருந்து எழுதிய "The Gentle Grafter" என்ற நூல் அவருக்கு மேலும் புகழைத் தேடிக் கொடுத்தது. சிறைச்சாலைக்குள் அடைக்கப் பட்ட ஹிட்லருக்குக் கூட சிறைக்குள் எழுத சுதந்திரம் கொடுக்கப்பட்டது. அவனது எதிர்காலத்திட்டங்கள் என்று மகுடமிட்டு அவனால் எழுதப் பட்ட "மெயின் காம்ப் (Main Kempt)" என்ற நூல் அவன் சிறைக்குள் இருந்த போதுதான் எழுதி விட்டு வெளியே வந்து அதனைப் பிரசுரித்து தான் சிறைகுள் இருந்தபோது மனதில் போட்ட திட்டங்களைச் செயல் படுத்த தொடங்கினான்.

## ஈழத்தின் நிலை

ஈழத்து மக்களுக்காக சுதந்திரம் வேண்டிப் போராடும் விடுதலைப் போராளிகள் பல அப்பாவி இளைஞர்கள் அரசியல் காரணங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டபோது அவர்களுக்கு கருத்துச் சுதந்திரம் முற்றாகவே மறுக்கப் பட்டது. வானொலி, பத்திரிகை தொடர்புகள் முற்றாக மறுக்கப்பட்டன. இதைவிட அவர்கள் தமிழ் இளைஞர்கள் என்ற ஒரே காரணத்திற்காக சொல்லப்பட்டார்கள். 1983 ஜூலை மாதம் 25, 27-ம் திகதிகளில் இருதடவை நடந்த வெலிக்கடை சிறைப்படுகொலையின் போது குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை, டாக்டர் இராசசுந்தரம் உட்பட 53 போராளிகள் கொல்லப் பட்டார்கள். அவர்களது கொலைச் சம்பவம்பற்றி பேராசிரியர் சிவசேகரம் அவர்கள் வடித்த ஒரு கவிதை நெஞ்சை நெகிழ வைப்பதாக அமைந்துள்ளது.

சற்றே விலகி
நந்தி வழி விட்டதுபோல்
வெலிக்கடையின்சிறைக்கூட
இரும்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்
அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்கின்ற
அறைகட்குள் கொலை
நடக்கும்
பகுத்தறிவு ஆளுகிற
புதிய யுகம்
அற்புதங்கள்
ஒருக்காலோ நடந்தாலோ
ஒப்பார்கள் என்பதனால்
இருக்கால் நடந்தேறும்
கண்டு அலுத்த
கற்சுவரோ மௌனிக்கும்

நன்றி: நதிக்கரை மூங்கில்

## தமிழ் கைதிகள் மீது பூசா சித்திரவதைகள்

தற்போது தமிழ் இளைஞர்கள் வெலிக்கடை, பூசா, பெலவத்தை ஆகிய சிறை முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். பூசா முகாமின தமிழ்க் கைதிகள் படும் துயரம் பற்றி அங்கு பததொன்பது மாதங்கள் விசாரணையின்றி சிறைவைக்கப்பட்டிருந்து விடுதலையான மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ் இளைஞர் முரளியைச் சந்தித்து அவரது பூசா அனுபவங்கள் பற்றி கேட்டோம். அதற்கு அவர் கூறியவை.

பூசாவில் எல்லாமாக 12 மண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திற்குள்ளும் குறைந்தது 100 பேருக்கு மேல் இருக்க முடியாது. ஆனால் அங்கு 300 - 350பேர் வரை அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கு ஒவ்வொரு மண்டபத்திற்கும் கப்படுவார்கள். அவ்வாறு அங்கு கொண்டு வரப்படும் ஒவ்வொரு கைதியும் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை இந்த நாலாம் மாடியிலுள்ள அதிகாரிகளே தீர்மானிப்பது வழமையாகும்.

நாலாம் மாடி சித்திரவதை



வெலிக்கடை தியாகிகளை நினைத்து ..

மொத்தமாகப் பத்து மலசல கூடம்தான் இருக்கிறது. ஒவ்வொரு கைதிக்கும் தமது காலைக்கடன்கழிக்க இரண்டு நிமிடங்கள் தான் வழங்கப் படும். குளியல் தொட்டியை நிரப்பிவிடுவார்கள். சகலருக்கும் ஏககாலத்தில் 15 நிமிடங்கள் தான் குளிப்பதற்குக் கொடுக்கப்படும். 300 கைதிகளும் 15 நிமிடத்திற்குள் குளித்தேயாக வேண்டும் ஒவ்வொரு கைதியும் விழுந்தடித்துக் கொண்டு குளிக்க முற்படும்போது வாளியால் மோதுண்டு இரத்தக்காயங்கள் படுவதுமுண்டு. பதினைந்து நிமிடத்திற்குள் குளித்து முடியாத நிலையில் அரை குறையாக சவர்க்காரம் போட்ட நிலையில் பல கைதிகள் சவர்க்காரம் காய்ந்த நிலையில் நாளாந்தம் காணப்படுவது இயல்பு. இந்தக் குளிப்பும் மூன்று நாட்களுக்கு ஒரு முறைதான் இடம்பெறும்.

## இந்தக் கைதி எந்த இயக்கம்

ஒரு இராணுவ முகாமிலிருந்து கொண்டு வரப்படும் கைதிகள் பூசாவிலுள்ள நாலாம் மாடியில் ஒப்படைக்

என்பது மிகவும் அகோரமானதாகும். இங்கு கால் முறிந்தவர்கள் கை முறிந்தவர்கள் காயப்பட்டவர்கள் ஏராளம். இவற்றைவிட முகாமில் சொறி, சிரங்கு போன்ற நோய்களால் அநேகமாக எல்லாக் கைதிகளுமே பாதிக்கப் பட்டுள்ளனர். வேறு எந்த வைகய நோய்களுக்கும் தக்க சிகிச்சை கிடையாது. என்ன நோய் என்று சொன்னாலும் எல்லா நோய்களுக்கும் பனடோலும் அஸ்பிரினும்தான் தருவார்கள் பூசாவில் பனடோலும் அஸ்பிரினும்தான் சர்வரோக நிவாரணியாகும்.

அரசியல் காரணங்களுக்காக கைது செய்யப்படும் ஏதுமறியாத அப்பாவி தமிழ் மக்கள் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்னவென்பதை அறியாமலோ அல்லது தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்தலிக்க வாய்ப்புக்கள் அளிக்கப்படாமலோ அல்லது வாய்ப்புக்கள் மறுக்கப் பட்டோ ஆண்டுக் கணக்காக சிறைகளில் அடைத்து வைக்கப்படுவதும் வைக்கப்படும் போது சுட்டுக் கொல்லப்படுவதும், சுட்டுக் கொல்லப்பட்டபின் அவர்கள் தப்பியோடும் போது சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று அரசாங்கம் அறிவிப்பதும் இன்று ஒரு போமியுலா வடிவில் செயற்படுத்தப் படுகின்றது.

## வெளிநாட்டவருக்கு மேனிமினுக்கு பிரசாரம்

காலி பூசாமுகாமுக்கு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அடிக்கடி வருகிறார்கள் என்றால் அன்று சரியாக நண்பகல் 12 மணிக்கே மதிய உணவு வந்துவிடும. இல்லாவிடின் பிற்பகல் 2 மணிககு வரும் அல்லது மாலை 4 மணிக்கு வரும். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வரும்போது மீன், இறைச்சி, முட்டை என்று நிறை உணவு வழங்கப்படும். மற்றைய நாட்கள் எல்லாம் இலைகுழை அவியலும் ஒரு கப் அரிசி சோறும் தான் வழங்கப்படும். வெளிநாட்டுப்பத்திரிகையாளர் வரும்போது அவர்கள் பார்க்கவும் புகைப்படம் எடுக்க வேண்டும் என்பதற்காகவும் வெளிநாட்டவர்கள் முன்னால் தான் அமர்ந்து இந்த நிறை உணவை நாம் உட்கொள்ள வேண்டும்.

ஒரு முறை பூசாமுகாமுக்கு விஜயம் செய்த ஒரு வெளிநாட்டுப்பத்திரிகையாளர் எங்கள் நாட்டுச் சிறைகளில் கூட இப்படி சத்துணவு வழங்கப் படுவதில்லை என்றார். உண்மை நிலவரததைச் சொன்னால் எமக்கு அன்று இரவு உணவு கிடையாது. உதை கிடைக்கும் என்பதால் எல்லோரும் வாய் மூடி மௌனிகளாகவே இருந்தோம்.

இவ்வாறு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் வருகிறார்கள் என்றால் காலை 4.30 மணிக்கே வந்து எம்மைக் குளிக்குமாறு பணிப்பார்கள். காலை 4.30 மணிக்கே குளிப்பு என்றால் அன்று தாராளமாக நீர்த்தொட்டி நிறைய தண்ணீர் இருக்கும். அத்தோடு சரியாக 12 மணிக்கு சப்பாடு வரும், என்று நம்பியிருக்கலாம். அத்தோடு காலை 4.30 மணிக்கு குளிப்பு என்றால் அன்றைய தினம் யாரோ வெளிநாட்டவர்கள் வருகிறார்கள் என்பது எமக்குத் தெரிந்துவிடும். அதனை நிச்சயப்படுத்திக் கொள்வதோடு இவ்வாறான வெளிநாட்டவர்கள் ஒவ்வொரு நாளும் வரக்கூடாதா என எங்கள் மனம் ஏங்கும்.

## கேணலின் நாதோபசனை

பூசாமுகாமில் பல வசதியீனங்கள் இருக்கின்றன. அங்கே இருக்கும் இராணுவ அதிகாரி கேணலிடம் (இவரை டீன் என்றும் அழைப்பர்.) சென்று எமக்குப் படுக்கப்பாய் இல்லை என்று சொன்னால் அதற்கு அவன் நானும் என்னுடைய வீட்டில் பாய் இல்லாமல்தான் படுக்கிறேன் என் பான். ஆனால் அவனது படுக்கை ஆர்ப்பிககோ றப்பர் மெத்தை போட்டதாக இருக்கும்.

எங்களுக்கு குளிப்பதற்கு தண்ணீர் வசதி போதாது என்றுசொன்னால் எனது வீட்டிலும்தண்ணீர் வசதியில்லை நானும்2 கிழமைக்கு ஒரு தடவை தான் குளிக்கிறேன் என்பான். ஆனால் அவன் காலையும் மாலையும் "சவர்பாத்" எடுப்பது அன்றாட நிகழ்வாகும். நாங்கள் ,தங்கி இருக்கும் மண்டபக் கூரை ஓட்டையாதலால் மழையில் நாங்கள் கஷ்டப்படுகிறோம் என்றால் எனது வீடும் ஓட்டைதான் நானும் மழையில்தான் கஷ்டப்படுகிறேன் என்பான். அவனது வீடு பிளாட்போட்ட காற்றோட்டமுள்ள வீடு அங்கு காற்றாடியின் கீழ் கம்பீரமாக இருப்பான்.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றங்களால் குற்றவாளிகளாகக் காணப்பட்ட குற்றவியல் கைதிகள் (சிங்கள வர்கள்) இன்று இலங்கைச் சிறைச்சாலைகளுக்குள் அடைக்கப்பட்ட நிலையில் அவர்கள் சிறைக்கு வெளியே இருந்தபோது செய்த குற்றங்களைவிட மிக மோசமான குற்றச்செயல்களை சிறைச்சாலைக்குள்ளேயே அரசின் அனுசரணையுடன் தமிழ் அரசியல் கைதிகள்மீது புரிந்து வருகிறார்கள்.

வடக்கு கிழக்கில் இராணுவத்தின் மீது ஏதாவது பாரிய தாக்குதல் நடந்தால் அன்றைய தினம் முகாமின் உள்ளே எங்கள் மீது பலமான தாக்குதல் மேற்கொள்ளப்படும். நாம் பலமாகத்தாக்கப் பட்டோம் என்றால் அன்றைய தினம் வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவததிற்குபாரிய சேதம் ஏற்பட்டு விட்டது என்று ஊகித்துக் கொள்வோம். எமக்கு பத்திரிகை, வானொலி தொடர்புகள் எதுவுமே கிடையாதபடியால் வெளியே என்ன நடைபெறுகிறதென்றே தெரியாது.

பெற்றோர்கள் முகாமுக்கு விஜயம் செய்யும் பொழுது கொண்டு வரும் பொருட்களைச் எமக்குப்



ஜோன்சன்

பரிமாற்றம் செய்யும்போது அரைவாசிப் பங்கை சிப்பாய்கள் கொள்ளையடித்துவிடுவார்கள். உணவுப் பண்டங்களை எடுத்து வந்தால் அவற்றைத் தீமூட்டி எரித்துவிட்டு விடுவார்கள். எரித்துவிட்டுச் சொல்வார்கள் அவற்றைச் சாப்பிட்டால் முகாமிறகுள் தொற்று நோய் பரவிவிடும் என்பாரகள். உண்மையில் முகாமில் வழங்கப்படும் உணவில்தான் பூச்சியும் புழுக்களும் இருக்கும்.

சி. ஐ. டி. பொலிசார் எம் மீது மேற்கொண்ட விசாரணை

(10 ஆம் பக்கம் பார்க்க)

● அருண்பிரசாத் ●

''சமகாலம்'' என்பது இப்போது இலக்கிய மேடைகளிலும் ஏனைய இடங்களிலும் பேசப்படும் ஒரு சொல். சில மாதங்களுக்கு முன்னர் நடந்த இலக்கிய விமர்சனக் கூட்டம் ஒன்றில் இலக்கிய விமர்சகர் கூறிய ஒரு கருத்தினை இங்கு பார்ப்போம்.

''இந்தக் கதையில் 'ஆமி' என்று ஒரு இடத்தில் வருகின்றது. எனவே இது சமகாலத்தோடு தொடர்புடைய கதை என்று அவர் குறிப்பிட்டு இருந்தார்.

எப்படி இருக்கின்றது இந்தக் கருத்து. ஆரம்பகால எழுத்தாளர்கள் சிலர் இவ்விதமாக 'ஆமி' ''ஷெல்லடி'' ''துப்பாக்கி'' என்று ஏதாவது வந்தால் சமகாலக்கதை என்று எவ்விதம் நினைக்கின்றார்களோ அவ்விதம் முயற்சி பெற்ற அந்த விமர்சகரும் நினைப்பது வேடிக்கையான விடயமே.

புதிய எழுத்தாளர்களிடம் நாங்கள் குறைகாண முடியாது. எழுத வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக இவ்விதம் எழுதுகின்றார்கள். வெறும் பிரச்சாரக் கதைகளாக, கலைத்துவம் இல்லாமல் அவை படைக்கப்பட்டு இருந்தாலும் கதைக் கருக்களில் அடிமை வாழ்வின் அவலங்கள் இருக்கும்.

நாங்கள் இங்கு ஆராயமுற்படுவது வேறுவிடயம். 'ஆமி' என்ற சொல் வந்தால் சமகாலக்கதை என்று எவ்வாறு அந்த விமர்சகர் கருதினாரோ அவ்வாறே பலர் சமகாலத்தில் நடக்கும் அவலங்களை மாத்திரம் குறிப்பிட்டு விட்டால் நாங்களும் சமகாலப் பிரச்சனையோடு தான் நிற்கின்றோம் என பாவனை செய்வதைத்தான் குறிப்பிட்டுக் காட்ட முனைகின்றோம்.

ஒரு பகுதி மக்கள் அவல வாழ்வு வாழும் போது மறு பகுதிமக்கள் சந்தோஷமாக வாழமுடியாது. கேளிக்கையாக பொழுதினைப் போக்க

**நடராஜன் மைந்தன்**

முடியாது- அதனை மறந்து செயல்படுபவர்களை மக்கள் சமுதாயம் மன்னித்து விடவும் மாட்டாது.

நம்மிடையே சில இடங்களில் பெரிதாக விழாக்கள் ஏனைய கலாசார நிகழ்ச்சிகள் நடக்கின்றன. நாட்டுச் சூழல் துயரமாக இருப்பதால் மக்கள் அவல வாழ்வு வாழுவதால் நடக்கும் நிகழ்வுகளில் இவை பற்றி சில குறிப்புக்கள், நிகழ்வுகள் மாத்திரம் வந்தால் தங்கள் கடமை முடிந்து விடும் என நினைக்கின்றார்கள்.

ஒரு கவியரங்கில் ஒரு பட்டி மண்டபத்தில், சமகாலப் பிரச்சனை பற்றி சில தகவல்களை சொன்னால் மாத்திரம் போதுமா? இதுவே இங்கே நாங்கள் கேட்கும் கேள்வி.

பிரச்சனையான இந்தக் காலகட்டத்தில், சமகால அவலங்களை மாத்திரம் எடுத்துரைத்தால் சரியா? மக்கள் துன்பப்படும் போது விழாக்களையும் ஏனைய நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்பவர்கள் இதுபற்றி யோசிக்க வேண்டும்.

வெறும் உதாரணங்களும் சிலேடையான பேச்சுக்களும் மக்களை அந்த நேரத்தில் சிரிக்க வைக்கவோ, திசைமாற்றவோ உதவுமே தவிர வேறு எதையும் செய்ய முடியாது.

இவ்வளவு கஷ்டங்களையும் அனுபவித்த பின்னரும் கூட எம்மத்தியில் உள்ள மக்கள் நாங்கள் என்ன நிலையில் இருக்கின்றோம் என்பது சிறிதளவு உணர்வும் இல்லாமல் வேதாந்தம் பேசிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தருவகை வேண்டிக்கொள்வது பற்றியும் எதற்காக போராட்டம் நடத்த வேண்டும் என்பது பற்றியும் சந்திர மண்டலத்தில் வாழ்பவர்களைப் போல கதைக்க முற்படுகின்றார்கள்.

நமது இளைஞர்களின் தியாகங்கள் ஏனைய பொது மக்களின் உயிர் உடமைகளின் இழப்புக்கள் எல்லாம் எதற்காக நடக்கின்றன என்பது பற்றியும் ஒருசிலர் எந்தவிதமான உணர்வும் இல்லாமல் உள்ளனர்.

இவர்களுக்கும் சோர்வுற்று இருக்கும் மக்களுக்கும் ஏதாவது செய்தியினைச் சொல்ல இத்தகையவிழாக்களும் ஏனைய கூட்டங்களும் முனைய வேண்டும்.

இலக்கியமோ ஏனைய கலைகளோ சோர்வுற்று இருக்கும் மக்களை உற்சாகப்படுத்தும் தான் அதற்காக வெறுமனே அவர்களைக் கேட்டு விட்டுப் போகும் மக்களாக மாற்றுமல்




சிந்திக்கக் கூடிய மக்களாக்க வேண்டும்.

அதற்கான நிகழ்ச்சிகளை இந்த விழாக்களை நடத்துபவர்கள் செய்ய வேண்டும். மொத்தத்தில் நாம் கூறுவது என்ன வென்றால் இத்தகைய விழாக்கள் மக்களுக்கு நம்பிக்கையினையும் எதிர்காலத்தில் அவர்கள் ஆற்றவேண்டிய செயல்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும்.

வழக்கமான விழாக்களைப் போல அல்லாமல் காலத்தின் தேவையினை உணர்ந்து செயல்பட்ட விழா அமைப்பாளர்கள் முனைவார்கள் என நம்புகின்றோம்.

### சமகாலம்

சமகாலத்தைய இலக்கியங்கள் என்ன நிலையில் இருக்கின்றன. சமகாலத்தைய இலக்கியங்கள் எப்படியாக அமையவேண்டும்? இதுபற்றி பல இடங்களில் பலர் பல விதமான கருத்துக்களைக் கூறுகின்றார்கள்.

இலக்கியச் சாளர ஆர்வலர்களுக்காக நாங்கள் ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எம்மிடையே உள்ள பிரபல எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள் பலரைச் சந்தித்து இது பற்றி அவர்களின் கருத்துக்களை அறிய முனைந்துள்ளோம்.

விரைவில் இளைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் சிலர் அவர்களைச் சந்திப்பார்கள். மிகச் சுருக்கமாக அவர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை இலக்கியச் சாளரத்தில் தருவோம் எனக் குறிப்பிட விரும்புகிறோம்.

எழுத்தாளர்களும், ஏனைய இலக்கிய நண்பர்களும் இந்த விடயத்தில் எம்முடன் ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

### ஒரு கேள்வி

எம் மத்தியில் உள்ள எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் பலர் அரசாங்கசேவையில் உள்ளவர்களே எழுத்தாளர்களாக இருந்து கொண்டு அரசாங்க சேவையில் இருப்பவர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்களை ஒரு பட்டியல் போட்டே காட்ட முடியும்.

நாவலாசிரியர்களாக, சிறுகதையாளர்கள் கவிஞர்கள் என்று இருப்பவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பலர் அரசாங்க சேவையில் தான் தற்போது உள்ளனர்.

நல்ல தமிழ் அறிவும் கவிதைபாடும் ஆற்றலும் உள்ள சோ. பத்மநாதன் யாழ்ப்பாண பல்கலைகழக மருத்துவபீடாதிபதி நந்தி, செங்கையாழியான். வீரமணிஐயர் போன்றவர்கள் (இவர்களின் பெயர்கள் உதாரணத்திற்காக மட்டும் தரப்படுகின்றன. பட்டியல் போட்டால் அது மிக நீண்டு விடும்.) எல்லாம் அரசாங்க சேவையில் உள்ளவர்களே. எல்லோருக்கும் தெரிந்த இந்த விடயங்கள் சில பேருக்கு தெரியாதது வியப்பே.

### ஒரு குறிப்பு

இலக்கியக் கனதியாக அமைய விமர்சகர்களின் பணி முக்கியமானது. ரஷ்ய அறிஞர் ஒருவர் இதுபற்றிக் குறிப்பிட்ட சிலகருத்துக்கள் இவை.

'இலக்கியத்துக்கும் நிர்மாணம் பற்றிக் கூறும் அதே வார்த்தை பொருந்தும். அதாவது எவரும் எதுவும் செய்யாமல் சும்மா நின்று வெறுமானே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. முக்கியமாக விமர்சகர்கள் அவ்வாறு இருக்க முடியாது. உங்களுக்குத் தேவையான விஷய ஞானம் இல்லாவிட்டால் போங்கள் போய்க் கற்றுக்கொள்ளுங்கள் அதற்கிடையில், உங்களால் அதிகமாக வேலை செய்யமுடியாது என்றால், செங்கல்களை யாவது பொறுக்கிக் கொடுங்கள்.

இலக்கியக் குப்பைகள் அதிகரித்து விடுவதற்கான பிரதானமான காரணங்களில், நேர்மையான இதய பூர்வமான பொறுப்புமிக்க விமர்சனம் இல்லாமையும் ஒன்றாகும். இந்த அத்தியாவசியமான தன்மைகளை விமர்சகர்கள் நெடுங்காலத்துக்கு முன்பே உருவாக்கிக் கொண்டிருக்க வேண்டும். தமது தரக்குறைவான படைப்புக்கு எழுத்தாளர் ஏற்கவேண்டிய பொறுப்பில் ஒரு பகுதியையாவது அவர்கள் ஏற்று கொண்டிருக்க வேண்டும். விமர்சகர்களின் குற்றம் சார்ந்த உடந்தைப் போக்கினால் தான் ஒரு தரக்குறைவான நூல், பல பதிப்புக்களாக வெளிவர முடியும். இதற்கும் மேலாக, அது இலக்கிய உலகில் புதிதாகக் காலடி வைத்துள்ளவர்களுக்கும் ஒரு வழிகாட்டியாகப் பயன் பட்டு விடும்.''




○ மலையக மக்கள் வரலாற்றுக் கதை ○

உ கதை - கண்ணீர் - கவிதை உ

## பாதுகை அல்ல

- நாவண்ணன் -

பத்தினித் தமிழராம்
பதத்தினைத் தந்தகாலே
பழமையை தலையினில் வைத்து- கணவன்
உத்தமன் அல்லாத
உலுத்தனும் இருப்பினும்
உத்தமி துயர் கொளல் போல

கண்ணகி வழியிலே
கண்மூடி வாழ்கின்ற
கருத்தினை இங்கு யான் சொல்வேன். புதுமை
பெண்ணவள் போலவே
புயலென மாறியே
புரிகுவீர் எதிர் வழக்காடி

பாதுகை ஆகியே
பழ வழக்காடும்
பாவையின் பாதையில் வேண்டாம்- இவன்
தீதுகை ஓங்கிடின்
தீமையை சாடியே
தீரமாய் வாழ்ந்திடல் வேண்டும்

காதலர் மனத்துடன்
கையது கோத்திடல்
கடமையே ஆயினும் வாழ்வில்- கொண்ட
காதலன் தூய்மையில்
காதகன் ஆகிடில்
காதலி தாங்கிடலாமோ?

இரு மண உறவுடன்
இயற்றியே இல்லறம்
இனிமுடி யாதெனக் கண்டால்- உடன்
திருமண முறிவுதான்
திருப்தியாம் என்கிடில்
திடமுடன் முடிவு கொள் வாழு

மலையகம் எம்மவர்
மண்ணது ஆகுமோ
மற்றுமோர் தாய் மகவல்லர்- எம்
நிலையகம் இங்கு யாம்
நிற்பது எம்கடன்
நிகழ்த்துவோர் உரிமைகள் கோரி

மோதலே ஆகினும்
மோதியே சாகினும்
முழங்குக முரசுனின் அதிர- பிரிந்து
போதலே முடிவெனில்
பொங்கியே அணிதிரள்
பொலிகள் பொடி பொடியாக

மலையக மங்கையர்
மாலை இழப்பினும்
மனமது சோர்வது இல்லை- மலையில்
இலை கொய்து வாழ்வினை
இன்னும் தொடருவாள்
இது ஒரு பாடமாய் கொண்டு

ஒடுதல் உயிர்க் கஞ்சி
ஒதுங்குதல் நிழல் கண்டு
உன் பழம் வாழ்வுக்கு மாசு- நின்று
சாடுதல் கொள்கையில்
சாகுதல் முன்வழி
சத்தியம் காத்திங்கு வாழு

தரித்திரம் வாழ்க்கையில்
தரித்திரா நித்தியம்
தனித்துவம் காணுவம் வாழ்வில்- புதிய
சரித்திரம் காணுவம்
சமத்துவம் காணுவம்
சங்கமம் ஆகுவம் மலையில்

பொறுத்தவர் ஆளுவர்
பொறுத்திடு நாள் வரும்
பொன்மயம் ஆகிடும் வாழ்வு- எம்மை
வெறுத்தவர் உணருவர்
வேதனை காணுவர்
விரைவினில் வரும் அந்த நாளே.

## இவ்வாரக் கதையமுதம்

# காலத்தின் நியதி

## யதார்த்தன

பஸ் விரைந்து கொண்டிருக்கிறது. "ஒரு மாதிரி ஆனையிறவு காம்பை தாண்டியாச்சு" பக்கத்துப் பெரியவர் அலுத்துக் கொள்கிறார். எனக்கும் பெரிய அலுப்பாகத்தான் இருக்கிறது. பெரியவரிடம் மெல்லமாய் கதை கொடுக்கிறேன்.

"பெரியவர் நீங்கள் எவ்விடம்"?

நான் தம்பி கொடிகாமம்" பேச்சு வளர்கிறது.

"உந்த ரெயின் இருந்தா பிரச்சனையே இல்லை. எல்லாத்தையும் கெடுத்துப் போட்டாங்கள்". ஜன்னலுக்கால் பின்னோக்கி ஓடுகின்ற மரங்களைப் பார்த்தபடி சொல்லுகிறேன். பெரியவரிடமிருந்து பதிலில்லை. ஜன்னலிலிருந்து கண்ணை எடுத்து பெரியவரைப் பார்க்கிறேன். பெரியவர் என்னை வடிவாக உற்றுப் பார்க்கிறார். "தம்பி நீ வெளிநாட்டாலையோ வாறீர்" சின்னச் சிரிப்போடு கேட்கிறார். "ஓம் பெரியவர் சுவிஸாலை வாறன் ஏழு வருசத்தாலை வாறன். இப்ப யாழ்ப்பாணத்தைப் பார்க்க ஆசையாயிருக்குது. சின்னப் பெருமிதத்துடன் கூறிக் கொள்கிறேன். இப்ப யாழ்ப்பாணம் முந்தினதைப் போல இல்லையாம்?" நானே தொடர்கிறேன். "ஓம் தம்பி முந்தினதைப் போல இல்லைத்தான். பிரச்சனைகள் கூட..." பெரியவர்சாதாரணமாய் கூறுகிறார். "அதுதான் எங்கட கொம்பனியில் ஒரு மாத லீவு எடுத்துக் கொண்டு வந்தனான், போகேக்கை வீட்டாக்களையும் கூட்டிக் கொண்டு போவமெண்டு......" பெரியவர் பக்கத்து ஆள் வைத்திருந்த பேப்பரை வாங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் நானும்! எட்டிப் பார்க்கிறேன்." 'நல்லூரில் குண்டு வீச்சு, நாலு பேர் பலி" தலையங்கம் தலை கிறுகிறுத்தது எனக்கு. கட்டாயம் இந்த முறை எல்லாரையும் கூட்டிக் கொண்டு போயிட வேணும்" மீண்டும் எண்ணிக் கொள்கிறேன்

கொடிகாமத்தில் பஸ் நிற்கிறது. பெரியவர் இறங்கிக் கொள்கிறார். இன்னும் அரை மணித்தியாலத்திற்குள் யாழ்ப்பாணம் போயிடலாம். போகப் போக பஸ் காலியாகிக் கொண்டு வருகிறது, ஜன்னலால் வெளியில் பார்க்கிறேன். கைதடி வேலிகள் பிய்த்துக் கொண்டு பின்னால் ஓடுகின்றது. பின் சீற்றில் இரண்டு நடுத்தர வயதுக்காரர் தங்கடை இளமைக் காலத்தை இரை மீட்டுக் கொண்டிருந்தனர். "கன நாளைக்குப் பிறகு நல்ல தமிழைக் கேட்க ஆசையாகத் தான் இருக்குது எண்டாலும் குளிர்ல நடுநடுங்கிப் பேசிற இங்கிலீசைப் போல வராது" இரண்டையும் ஒப்பிட்டுப் கொள்கிறேன். பொக்கட்டைத் தட்டி கோல்ட் லீவை வாயில் வைக்கிறேன் அலுப்புக்கு இதமாக இருக்கிறது. பனை வெளிகளைக் கடந்து பஸ் விரைகிறது. "ஓ......கட்டாயம் நாளைக்கு கூவில்கள் எடுத்து அடிக்கோணும்". படிச்சு முடிச்சு சந்தியில நின்ற காலத்தை நினைத்துக் கொள்கிறேன். காலத்தால எழும்பி அஞ்சாறு பேராய் கீரிமலைக்கு போய் கள் இறக்கும் வரை காவல் இருந்து கடலைப் பருப்போட குடிக்க......" நாவில் நீரூறுகிறது பஸ் யாழ்ப்பாணத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறது.

"அண்ணை பஸ்ஸை ஆரிய குளம் சந்திக்கு விடு கோட்டையில் ஷெல் அடிக்கிறாங்கள்" கண்டக்டர் கொஞ்சம் உரத்துக் கத்துகிறார். பஸ் ஆரிய குளத்தை நோக்கி விரைகிறது. டவுண் பக்கமாக குண்டுச் சத்தங்கள் பரவலாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றன. "நிலைமை மோசமாய்த் தான் போட்டுது" எண்ணிக் கொள்கிறேன். பஸ்ஸால் இறங்குகிறேன். சி. ரி. பி பஸ் ஒன்றையும் காணவில்லை.

காங்கேசன்துறை வானில் ஏறிக் கொள்கிறேன் ஒரே சனமாக [illegible]நக்கிறது. ஒருவாறு ச[illegible]ரித்துக் கொள்ளுகிறேன் இதென்ன இப்பிடி அடைச்சுக் கொண்டு...... மூச்சு விடவே கஷ்டமாயிருக்குது' சுவிஸ் எண்டா என்ன சுகமாய் குஷன் சீற்றில போகலாம்". அலுத்துக் கொள்கிறேன். வான் ஒருவாறு கொக்குவில் சந்தியைத் தாண்டி கோண்டாவிலில் நிற்கிறது. பெரிய சூட்கேசுடன் இறங்கிக் கொள்கிறேன். கோண்டாவில் சந்தி கொஞ்சம் வித்தியாசமாய்த்தான் இருக்கிறது. "அட சுப்பையாண்ணையின்ர தேத்தண்ணிக் கடை இன்னும் இருக்குது" அவசரமாய் கடையை நோக்கி நடையைக் கட்டுகிறேன். உள்ளுக்குள் ஒருவருமில்லை. மூலைக் கதிரையில்ஆறுதலாக அமர்ந்து கொள்கிறேன். சுப்பையாண்ணை மேசையிலிருந்து எழுந்து வாறார். 'தம்பிஎன்னவேணும். கண்ணை இடுக்கிக் கொண்டு கேட்கிறார். "ஒரு டீ தாங்கோ" "சுப்பையாண்ணைக்கும் நல்லா வயதுபோட்டுது. சுப்பையாண்ணையின்ர மகன் ரஞ்சன் என்னோட படிச்சவன். நல்லாப் பழகினனாங்கள். சுப்பண்ணை வரட்டும் கேப்பம்" நினைத்துக் கொள்கிறேன். ஆவி பறக்க டீ பொத்தென வைக்கப்படுகிறது. "சுப்பையாண்ணை என்னைத் தெரியேல்லையோ" கேட்கிறேன். பக்கத்தில் வந்து உற்றுப் பார்த்தவிட்டு அதிருப்தியாய் தலையை ஆட்டுகிறார்.

"அண்ணை நான் சண்முகம் கந்தையரை மகன்"

"யார் சிறுப்பர் கந்தையாவோ...... அடடா...... சண்முகம் வெளிநாட்டாலை வாறாய். நேற்று உன்ர தம்பி வந்தவன் இதைப்பற்றி சொல்லேல்லையே" எதிர்க் கதிரையில் வந்து இருந்து கொள்கிறார். ஊர்க்கதைகளை அலசுகிறோம்.

"அது சரி அண்ணை உவன் ரஞ்சன் எங்கை?" இது நான்.

சிறிது நேரம் சுப்பையாண்ணை மௌனமாக இருக்கிறார். பிறகு "அவன் தம்பி இயக்கத்தில திரியிறான்" சாதாரணமாய்ச் சொல்லுகிறார். எனக்கு திக்கென்று இதயம் அடிக்கிறது. கொஞ்ச நேரத்தால சொல்லுகிறேன் "சுப்பையாண்ணை மெல்லமாய் வெளிநாட்டுக்கு அனுப்பி விடுங்கோ, பிரச்சினையில்லை". சுப்பையாண்ணை பதில் செல்லாமல் சிரித்துக் கொள்கிறார். கடைக்குள்ளிருந்து வெளிக்கிடுகிறேன். 12 மணி வெய்யில் கொளுத்துகிறது. விரைவாய் நடையைக் கட்டுகிறேன். பழைய நினைவுகள் பசுமையாய் வருகிறது. இந்த மதகில இருந்து தான் எங்கட காலம் கனிசமாய் போனது எண்டாலும் அந்த வாழ்கையும் வாழ்க்கை தான். வலப்பக்கமாய்த் திரும்புகிறேன். சீக்கோ சுவரில தான் அப்ப சினிமா போஸ்டர்கள் ஒட்டப்படுவது வழக்கம். தலை தன் பாட்டிற்குத் திரும்புகிறது. இதென்ன சினிமா போஸ்டர் ஒண்டையும் காணேல்லை. எல்லம் வீர வணக்கங்களாயிருக்குது. ஒன்றை ஊன்றிப் பார்க்கிறேன். "தியாகிகள் 329" இந்தமுறை தம்பி சிறியை கட்டாயம் கூட்டிக் கொண்டு போயிட வேணும். இவனும் இவங்களிலை திரியிறானோ இல்லட்டி ஒழுங்காகப் படிக்கிறானோ" யோசித்தபடி விரைவாய் நடக்கிறேன். கோயிலைக் கடந்து பள்ளிக்கூடத்து பக்கத்து ஒழுங்கையால் திரும்புகிறேன். "போன மாதம் மதில் கட்ட பத்தாயிரம் ரூபாய் அனுப்பினேன். இந்நேரம் கட்டி முடிஞ்சிருக்கும். என்னுக்குள்ளேயே கதைத்துக்கொள்கிறேன். சுந்தரத்தின்ர வீட்டைக் கடக்கும் போது வீடு இடிஞ்சிருப்பதைக் கவனிக்கிறேன். இதெல்லாத்தையும் அம்மா கடிதத்தில எழுதினவா. இடதுபக்க ஒழுங்கையால் திருப்புகிறேன். இதென்ன... எங்கட வீடு பழைய மாதிரி பனையோலை அடைச்சபடி மதில் கட்டேல்லையோ? தகரப் படலையைத் தள்ளுகிறேன்.

2

எல்லோரும் விருந்தையிலிருந்து கதைத்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு நாளைக்குப் பிறகு இப்பிடி சந்தோஷமாய்க் கதைக்கிறேன். இவன் சிறியை மட்டும் இன்னும் காணேல்லை. "அம்மா இவன் சிறி எங்கை? படிக்கப் போட்டானே?" நான் கேட்கிறேன் "எங்கேயோ போனான். இப்ப வந்துடுவான்" அம்மா தேத்தண்ணியோட வருகிறா. எல்லாக் கதையையும் அலசுகிறோம். முன்வீட்டு ராசனை ஆமி சுட்டது. சுந்தரத்தின்ரை வீட்டிற்கு குண்டு போட்டது சுதுமலையில ஆமி இறங்கினது எல்லாத்தையும் அம்மா ஆறுதலாய் சொல்லுறா. "அம்மா இப்ப இதை எல்லாம் சொல்லாதேங்கோ அண்ணை பயத்தில நாளைக்கே சுவிஸுக்கு ஓடப்போறான்" தங்கச்சி செல்வி சிரித்துக் கொண்டு சொல்லுகிறாள். படலை திறக்கிறது. சிறி வாறான். அட.... இவன் நல்லா வளந்திட்டான். 'ஆ... அண்ணை, வந்திட்டீங்களே. வந்து அருகில் இருந்து கொள்கிறான். சந்தோஷமாய் கதைத்துக் கொண்டிருக்கிறோம். கதை படிப்படியாய் அரசியலுக்குத் தாவுகிறது. "இண்டைக்கும் மன்னாரில பத்து ஆமி சரியாம். பெடியள் கெட்டிக்காரர்" புன்னகையோடு அம்மா சொல்லுறா.

"உதென்ன கதை பெடியளுக்கு ஏலுமே அவங்களைச் சமாளிக்க வாற வழியெல்லாம் தடுக்கி விழுந்தா ஆமி காம்ப். சும்மா கிடந்த சங்கை... இவன் ரஞ்சனும் உதில திரியிறானும்" என்னிலிருந்து சலிப்போடு வார்த்தைகள் வெளிவருகின்றன.

"எண்டாலும் அவங்களும் எங்களுக்காகத்தானே பாடுபட்டு சாகிறாங்கள், ரஞ்சன் அண்டைக்கு இஞ்சை வந்து சாப்பிட்டுப் போனவன். நல்ல பொடியன்" அம்மா பதில் சொல்லுறா.

"அண்ணை... ஒரு விசயம். இரண்டு கிழமைக்கு முதல் பெடியள் வந்து காசு கேட்டவங்கள்..." தங்கச்சி செல்வி தொடங்குகிறாள்.

"ஓமடா— தம்பி. அதைச் சொல்ல மறந்திட்டன். காசு கேட்டாப்போல எல்லாம் எங்களுக்காகத் தானே கேக்கிறாங்கள் நீ அனுப்பின பத்தாயிரத்தையும் தூக்கிக் குடுத்திட்டன்" அம்மா சாவகாசமாய் காலை நீட்டி வெற்றிலை போடுறா. எனக்கு தலை சுத்துது. 'என்ன... பத்தாயிரத்தையுமா?" திருப்பிக் கேட்கிறேன்.

"ஓமண்ணை. சின்னண்ணையின்ர பெடியள் தான் வந்தவை" செல்வி சிறிக்கு தேத்தண்ணியை நீட்டிக்கொண்டு சொல்லுறாள். "சிறியின்ரை பொடியள் எண்டா...?" குழப்பத்துடன் கேட்கிறேன். அம்மா வெற்றிலைத் துப்பி விட்டு கதைக்கத்தொடங்கிறா. "தம்பி உவன் சிறியும் இப்ப பெடியளோட சேர்ந்திட்டான்." சிறியை பார்க்கிறா. எனக்கு யாரோ மண்டையில சுத்தியலால் அடிச்ச மாதிரி. இருக்குது. ஆத்திரம் ஆத்திரமாக வருகுது. அங்கையிருந்து கஷ்டப்பட்டு ஓடியாறன். இஞ்சை என்னடாவெண்டால் கொஞ்ச நேரம் என்னால் கதைக்கமுடியவில்லை.

உங்கள் எல்லாருக்கும் விசரே பிடிச்சிருக்கு. ஆமியோட அடிபடிறியளாம். அவங்கள் அடிபடட்டும் அடிபட்டு சாகட்டும் உனக்கென்ன, அடுத்த மாதம் போகேக்கை உன்னையும் கூட்டிக்கொண்டு தான் போறன். ஏதாவது சொன்னாய் கெட்ட கோபம் வரும்" முன்னால் இருந்த ஸ்டூலை எட்டி உதைகிறேன். கொஞ்ச நேரம் மயான அமைதி நிலவுகிறது. அம்மா தான் உடைக்கிறா.

"என்ன இருந்தாலும் தம்பி எங்கடை நாட்டை நாங்கதான் பாதுகாக்க வேணும். மற்றாக்களை நம்பியிருக்கேலுமே" அம்மாவின்ர கதையில ஏதோ ஒரு உறுதி தொனிக்கிறது.

"இவங்க இல்லாட்டா நீங்க இஞ்சை வந்து எங்களைப் பார்த்திருக்க ஏலாது அண்ணை. நாங்க எப்பவோ செத்திருப்பம். யாழ்ப்பாணமும் செத்திருக்கும்" செல்வியும் கதைக்கிறாள். எனக்கு ஒன்றுமே ஏறவில்லை. தூரத்தில் தெரிந்த பனையை வெறித்துக் கொண்டிருக்கிறான்.



"அண்ணை நீ போகேக்கை இருந்த யாழ்ப்பாணம் இப்ப இல்லை இப்ப எல்லாரும் சுதந்திரத்தின்ர தேவையை உணர்ந்து போராடிக் கொண்டிருக்கினம். இது ஈழம். நீதான் சுவிஸிலை. நீயும் உன்போல ஆக்களும் போராட்டத்தைச் சொல்லி பிழைச்சுப் போனீங்க. இப்பிடி ஒவ்வொரு சனமும் போட்டால் எங்களை எங்கட மண்ணை யார் காப்பாற்றுறது? உன்னைப் பொறுத்த வரை இது ஒரு சத்திரய் சாவடி. வருவாய் இருப்பாய் ஒரு மாதத்தாலை போடுவாய். எங்களுக்கு இது சத்திய பூமி. பிறந்து வளர்ந்த மண். வளரப் போகும் மண். செத்து எரியப் போகும் மண். எங்களுக்கு இந்த மண் வேணும். எங்கட மரணம் இந்த மண்ணிலதான் நிகழவேணும். இதுக்காக நாங்க கோல்ட் லீவோடும் விஸ்கியோடும் இஞ்சை இல்லை. சுதந்திர தாகத்தோட பனியிலயும் குளிரிலயும் இருக்கிறம். இந்த மண்ணுக்காக எங்கட இளமையை மட்டுமல்ல உயிரைக் கூட இரை குடுப்பம்" சிறி மேலும் கதைத்துக்கொண்டே போகிறான்.

எனக்கு மெல்ல மெல்லப் புரிகிறது. நான் விட்டுப்போன வெறும் பூமியில்லை இது. உணர்ச்சிக் கொந்தளிப்பின் உக்கிரபூமி பயிர் விளையும் வெறும் பூமியில்லை. மானம் விளையும் மறப்பூமி. தினமும் மரணத்தைக் கண்டு மரத்துப் போய் எதிர்த்து நிற்கும் பூமி. அடிபட்ட புலியாய் புரட்சிக் கொடியை ஏந்தி நிற்கும் புனித பூமி நான் விட்டுப்போன மந்தை மக்களல்லர் இவர்கள். உரிமைப்போரின் உச்சியிலிருக்கும உண்மை மக்கள். "காலத்தின் நியதி எனது பூமியை எவ்வளவு மாற்றிவிட்டது." எண்ணிக் கொள்கிறேன். சிறியைப் பார்க்கிறேன். அமைதியாய் அமர்ந்திருக்கிறான். இவன் என் தம்பியில்லை. இந்த மண்ணின் வாசனையை நுகரத் தெரிந்த மனிதன். எனக்குள் ஏதோ ஒன்று குற்ற உணர்வாய் குறுகுறுக்கிறது. ஓ.. நான் பிழை விட்டிட்டன். மெதுவாய் வெளியில் வந்து குனிந்து முற்றத்து மண்ணை மென்மையாய் முத்தமிடுகிறேன்.

●

★ குட்டிக்கதை

## விண்ணில் இருந்து மண்ணுக்கு

மிக உயர்ந்த பதவி வகிக்கும் அதிகாரி அவர். அவரது கையெழுத்துக்களாக மாத்திரம் காத்திருப்போர் பலர். என்று அவரைக் கண்டதும் எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

தலையை நிமிர்த்தி நடந்து கொண்டிருந்த அவர் காண்பவர்களைப் பார்த்து சிரித்தார் ''ஹலோ தம்பி'' என்று கூப்பிட்டு சுகம் விசாரித்தார்.

இன்னும் சிலருடன் அக்கறையாக நின்று ஊர் புதினங்கள் பேசினார். யாரோ வேடிக்கையாகப் பேச உரக்கச் சிரித்தார்.

வேறு யாராவது இப்படியாகி நடந்தால் இதில் புதுமையாக குறிப்பிட ஒன்றுமில்லை. ஆனால் இவர் இவ்விதம் நடப்பது என்பது

தனது அலுவலகத்தில் தனக்குரிய இடத்தில் மேசையில் இருந்தால் உதவிக்காக வருபவர்களை நிமிர்ந்து பார்க்க மாட்டார். தெரிந்தவர்கள் வந்தால் திரும்பியே பார்ப்பது என்பது நடவாத காரியம்

சிரிப்பது என்பது நினைக்க முடியாதது ஒன்று 'வள்' என்று பாய்ந்து பாய்ந்து பற்களைக் கழற்றுவார். சகல பொறுப்புக்களையும் தன் தலைமீது சுமப்பதாக நினைத்துக் கொண்டு பொதுச் சேவையில் இருந்து கொண்டு பொது மக்களை துவம்சம் பண்ணிக் கொண்டிருந்தார்.

அப்படிப்பட்டவர் இன்று எல்லோரையும் பார்த்து சிரித்துக் கதைப்பதென்றால்? துணிந்தவன் ஒருவன். ''ஐயா பென்சன் எடுத்திட்டீர்களோ'' என்று கேட்டான்.

அவர் தலையைக் குனிந்து கொண்டார்.

''சிதம்பரவல்லி''

### முக்காலமும்...

13ஆம் பக்கத் தொடர்ச்சி

சபைமட்டுமே அதற்கு மேல் எதுவும் கிடையாது என்று அடம் பிடித்து வந்த ஜே. ஆர். நாடு சீரழிந்து இனியும் தாங்க முடியாது என்ற நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பு என்று புதிய திட்டத்தைத் தயாரித்ததுடன் வைத்திருக்கிறார். எவர் எதிர்த்தாலும், இதல் மாற்றமில்லை என்று அறுதியாகக் கூறுகிறார்.

ஆளும் கட்சி எம்பிக்கள் புதிய யோசனைகளை அங்கீகரித்து விட்டனர்; அமைச்சரவையும் நாளை அங்கீகரிக்குமென்று எதிர்பார்க்கலாம்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் அனைவரினது ராஜினாமாக் கடிதங்களும் அதி உத்தம ஜனாதிபதியின் பார்க்கெட்டுக்குள்ளிருக்கின்றன. இதுதவிர பாராளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் வைத்தால் எத்தனைபேர் மீண்டும் பாராளுமன்றத்துக்கு வருவார்கள்?

எனவே அடுத்த மாதம் 18 ஆந் தேதி பாராளுமன்றத்திலும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான புதிய யோசனைகள் அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கலாம்.

1957 ஆம் ஆண்டில் பண்டாரநாயகா ஒப்புக்கொண்ட வடக்கு - கிழக்கு இணைப்பை ''பண்டாரநாயகாவின் கொள்கை''யைப் பின்பற்றுவதாகக் கூறும் சிறிமா அம்மையார் இன்றும் எதிர்த்து நிற்கிறார் அதிகாரப் போட்டிக்கு இனியும் தமிழரைப் பகடைக்காய்களாக வைக்க முடியாதென்பதை அம்மையார் அனுபவ பூர்வமாக இன்னும் உணரவில்லை.

ஆனால் 1957 இல் இணைப்பை எதிர்த்து யாத்திரை சென்று நேற்றுவரை எதிர்த்தவர் இன்று அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டவர் இன்று ''இணைப்பை யார் எதிர்த்தாலும் அசைய மாட்டேன்'' என்கிறார்.

அம்மையாருக்கும் துறவிகளுக்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

### சிறைகளில்

களின் பின்பு ஒரு குற்றமும் இல்லை எம்மை விடுதலை செய்து வீட்டிற்கு அனுப்பலாம் என்று கூறிய பின்னர் கூட டீனிடம் (Dean) போனால் அவன் 15 நாட்களுக்குப் பின்னர்தான் வீட்டிற்குப் போகலாம் என்பான். வீட்டிற்கு எம்மை அனுப்புவதற்கு முதல் நாளும் எம்மைத் தாக்கி துன்புறுத்தி விட்டே வீட்டிற்கு அனுப்புவான்.


பிரகாசமான சலவைக்கு

பிறைற் சோப்

மல்லாகம்




★ தூய்மையின் சின்னம் ★




முடித்திடு!

தொடங்கிய செயலை முடிக்கத் தப்பாக அணைக்கத் தொடங்கிய தீயை அரை குறையில் விடாதே. அதில் எஞ்சிய சிறு நெருப்பு மீண்டும் பெரு நெருப்பாய் விடும். பகைமையும் அவ்விதமே முடிக்க வேண்டியதை முற்றாக முடி. வினை செயல் முறை இங்கு இதுவே.

(குறள் 674)

### மீண்டும்

கோயில் வீதியில் போய் சேர்ந்ததும் முன்னமே போய்ச் சேர்ந்துவிட்ட அவளின் ஊரவர்கள் கண்மணியைப் பார்வையால் வரவேற்றார்கள்.

மரங்களின் கீழ் மூட்டைகளைத் தலையணையாக்கி படுத்திருந்த சிலருக்கு அப்பால் ஒதுக்குப் புறமாக கண்மணி போய் அமர்ந்தாள். சரஸ்வதியும் புவனமும் கூடவே அமர பிள்ளைகள் மூன்று பேரும் அவர்களின் மடியில் சாய்ந்தார்கள்.

குளிர்மையாக வீசிய காற்று அவர்களுக்கு சிறிது உதவி செய்தது. தூக்கம் மெதுவாக கண்கள் வழியாக எட்டிப்பார்த்தது. இரவு முழுக்கத் தூங்காது அவர்கள் அடைந்த கஷ்டத்தின் பின்னர் இப்போது தான் ஆறுதல் கிடைத்துள்ளது

அவர்கள் இருந்த மரத்தின் மறுபுறத்தில் பலர் கூட்டமாக அமர்ந்திருந்தார்கள் இருந்தது மாத்திரமல்ல வெகு அக்கறையாக சிலவற்றினைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்...)

### போராளியின் ..

எனது மண்ணைக் கைப்பற்றிய அந்த சூரர்கள் குறிப்பிட்ட நேரத்தின் பின் முகாமை விட்டு வெளியேறி பொது மக்களின் வீடுகளுக்குப் படுக்கப் போய் விடுவார்கள் அவர்கள் அப்படிப் போவதற்கு முன் உள்ளே போகவேண்டுமெனத் துடியாய்த் துடித்தாய். ''நேரம் போகிறது உடனே போகவேண்டும்'' என பரபரத்துக் கொண்டிருந்தாய், உனது உயிரைப் பறிக்க காலனும் தயங்கினான். நீ கொண்டு போன வாகனம் வழியில் புதைந்தது நீயும் இறங்கித் தள்ளிக் கொண்டு விரைவாக உள்ளே போக வேண்டுமென அவசரப்படுத்தினாய்.

கரும்புலியாக உள்ளே சென்றாய்- வெளியில் பயங்கரச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ''டேய் சிலவேளை மில்லர் பாய்ந்து மதில்களுக்குப் பின்னால் கவர் எடுத்திருப்பான் கவனமாகப் பார்'' என்று எம்மிடையே ஒரு குரல் கேட்டது. நீ தப்பிவிடமாட்டியா என்ற நப்பாசையில் எழுந்த அந்தக் குரலுக்குரியவன் உன்னைத் தேடுகிறான். என்னைத் தேட வேண்டாம். நான் உங்கள் மனத்தினுள்ளே இடம்பிடித்து விட்டேன் என சொல்லாமல் சொல்கிறாய். ஒரு சாதனை சரித்திரமாயிற்று.

புலிகள் தமிழீழ மக்களின் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப் படுகிறார்களென்றால் அதற்கு இந்தத் தியாகங்களே காரணம் என்பதினை அனைவரும் உணர்ந்து கொள்கின்றனர். போராட்டத்தின் அடுத்த அத்தியாயத்திற்காக நாமும் காத்துக் கொண்டிருக்கிறோம்!

மாஸ்டர்

## அம்மா நீயும் அழுவதை நிறுத்து...!

சும்மா மூலையிற் சோம்பிக் கிடந்து
அம்மா நீயும் அழுவதை நிறுத்து!
சின்னவன் எனினும் சிறுத்தைதான் நானும்
சிந்துவேன் குருதி சுதந்திரம் காக்க
அனுதினம் எங்களை அகதிகளாய் ஆக்கும்
அந்நியர் அவர்களை அடித்து விரட்டுவேன்
பொன்னும் பொருளும் பொசுங்கிப் போயினும்
பொன்னுடல் மண்ணில் புழுத்து நாறினும்
மின்னிய எங்களின் வீரம் சாகாது
சொந்த மண்ணிலே சோகங்கள் மலிந்தபின்
பந்தம் என்னிலே பற்றிப் படருமோ?!
விடுதலைத் தீயில் வெந்து போய் விட்ட நம்
வீர புதல்வரின் வழியிலே நடப்பேன்
இளைப்பின்றி நானும் இருளிலே நடப்பேன்
முடிவிலே எமக்கொரு விடிவுண்டு என்பதால்,

எழுதியவர்;-

ஆதிலட்சுமி - இராசையா

அடுத்த வார மலரில்

'சானி' எழுதும்

ஓய்வற்ற துப்பாக்கிகள்

என்னும் சிறுகதை வெளிவரும்


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



R.R. பூபாலசிங்கம் JP

திதி 26. 7. 87

ஏழ்மையிலும் - நேர்மை
கோபத்திலும் - பொறுமை
தோல்வியிலும் - விடாமுயற்சி
தரத்திலும் - பரோபகாரம்
துன்பத்திலும் - தைரியம்
செல்வத்திலும் - எளிமை
பதவியிலும் - பணிவு
நல்லதையே நினை நல்லதையே செய்

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

B/2719

செலின் - இருபாலை

O/L விஞ்ஞானம்

ஆசிரியர்

J. R. சூரி

கீன் - சித்தங்கேணி

# ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடிகளில்



பிரபாகரனை அழைத்துச் சென்ற ஹெலி

# புதியதோர் அத்தியாயம்

ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் 24.7.87 அன்று மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை இடம் பெற்றுள்ளது. இந்திய விமானப் படையின் இரண்டு ஹெலிகப்டர்கள் இலங்கையின் ஆகாய வெளிப்பிராந்தியத்திற்குள் பிரவேசித்து சுதுமலை அம்மன் கோயில் பகுதியில் இறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களையும் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் ஏற்றிச் சென்ற நிகழ்ச்சி அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான நிகழ்வாக அமைந்து விட்டது.

1987 ஜூன் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இந்திய விமானங்கள் (ஒப்றேசன் பூமாலை) உணவுப் பொதிகளை போட்டனவே தவிர அவை தரையிறங்கவில்லை. ஆனால் 24.7.87 அன்று நிகழ்ந்த சம்பவத்தின்போது இலங்கைப் பிரதேசத்திற்குள் தரையிறங்கிய ஹெலிகப்டர்கள் இரண்டும் காலை 9 45 - 10 15 வரை அங்கே காத்துநின்று விடுதலைப் புலிகளின் தலைவர்களை அழைத்துக்கொண்டு சென்றன.

விடுதலைப் புலிகளின் தலைவரும் இந்திய அரசு அழைத்த கையோடு செல்லாமல் தான அதற்கு முன்னர் மக்களைச் சந்திக்க உடனடி வாய்ப்பு இல்லாத படியாலும் பொது மக்கள் தொடர்புச் சாதனமாக விளங்கும் பத்திரிகை நிருபர்களையெல்லாம் அழைத்து அவர்களோடு மனம் திறந்துபேசி நிலைமையை விளங்கப்படுத்தி பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி அந்தக் கட்டுமானத்தில் நின்றுதான் இந்திய அரசுடன் தமிழ் மக்களது பிரச்சனைக்கான தீர்வுகள் குறித்து ஆலோசனை நடாத்தப் புறப்பட்டுச் சென்றார்.

திரு. பிரபாகரன் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு புறப்பட்டுச் சென்ற சுதுமலை பிரதேசம் போராளிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பிரதேசம். கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஆயுதப் போராட்டத்தின் போது மரணமான பொது மக்களும் உயிர்த்தியாகம் செய்த போராளிகளினதும் அளப்பரிய பணியால் போராளிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட பிரதேசத்திலிருந்து பேச்சுவார்த்தைக்கு செல்லுதல் என்பது ஒரு கௌரவமான அந்தஸ்திலிருந்து கொண்டு பலமான அரசியல் பின்னணியின் கட்டுமானத்தில் இருந்து கொண்டு பிரச்சனையை அணுகுவதாகும் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படும்போது அவர் சக முஸ்லீம் நாடுகளிலுள்ள தனது அலுவலகம் ஒன்றிலிருந்துதான் புறப்பட்டுச் செல்வார். இந்த நிலைமை எமது போராட்டத்தில் இல்லை. இந்தமண் எமது சொந்தமண். எமது கட்டுப்பாட்டிற்குள் இருப்பதனால் இதுவும் ஒரு கௌரவமே.

> பாலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர்அரபாத் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்படும்போது அவர் சக முஸ்லீம் நாடுகளில் உள்ள தனது அலுவலகம் ஒன்றிலிருந்துதான் புறபபட்டுச் செல்வார், இந்த நிலைமை எமது போராட்டத்தில் இல்லை. இந்தமண் எமது சொந்தமண். எமது கட்டுப்பாட்டிற்குள் இருப்பதனால் இதுவும் ஒரு கௌரவம்.

மேலும் திரு. பிரபாகரன் அவர்கள் விமானம் ஏறும் போது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை. கையில் ஆயுதபாணியாகவே புறப்பட்டுச் சென்றார். இந்தியாவில் தங்கியிருக்கும் மிதவாதத் தலைவர்கள் இப்போதும்கூட தமிழகத்திலிருந்தே அதாவது இந்தியப் பிரதேசத்திலிருந்தே டில்லிப் பேச்சு வார்த்தைக்குப் புறப்பட்டுச் சென்று வருகிறார்கள். திரு பிரபாகரன் அவர்கள் பின்தளத்திலிருந்து புறப்பட்டுச் செல்லவில்லை. போராட்டக் களத்தினின்றே பேச்சு வார்த்தைக்குப் புறப்பட்டுச் சென்றார். இது ஒரு தலைமைத்துவ சிறப்புமிக்க நடவடிக்கையாகும். அதிலும் அண்மைக் காலத்தில் வடமாராட்சியில் ஏற்பட்ட இராணுவ ரீதியான பின்னடைவுகளின் பின்னர் பலவீனமான நிலைமையிலிருந்து புறப்பட்டுச் செல்லாமல் நெல்லியடி இராணுவமுகாம் தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி அந்த தாக்குதலின் மூலம் போராட்டத்தின் உறுதியையும் போராளிகளின் பலத்தையும் கப்டன் மில்லர் போன்ற ஒப்பற்ற தியாகிகளின் தியாகத்தையும் இதுபோல் இன்னும் தம்மை விடுதலைக்கு முழுமையாக அர்ப்பணிக்க தயாரான நிலையில் முண்டியடித்துக் கொண்டு நிற்கும் பலமான போராளிகளின் அணியை தன்னகத்தே கொண்டு இருப்பதை இலங்கை அரசுக்கும் அயல் உலகிற்கும் வெளிப்படுத்திய நிலையில் அவர் பேச்சு வார்த்தைக்கு சென்றமையும் பலமான ஒரு கட்டுமானமேயாகும்.



## சுதுமலைக்கு கௌரவம்

குடாநாட்டிற்குள் சிறீலங்காவினால இதத லியிருந்து வாஙகப்பட்ட சியாமார் செட்டி விமானங்கள் ஆறு முதன் முதலாக 1986 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சுதுமலை, தாவடி பகுதிகளில் தான் குண்டுகளை வீசின. கடந்த மே மாதம் 25 ஆம் திகதி சுதுமலை அம்மன் கோயிலுக்குத் திருவிழாவிற்கு வந்த மக்கள் மீது தான் மீண்டும் இந்த விமானங்கள் குண்டுகளை வீசின. வீச்சு செயலானது மறுநாள் 26-5-87 அன்று ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பறேசன் லிபறேசனுக்கான' சிறீலங்காவின் முதல் நாள் ஒத்திகை என்றே கருதப்பட்டது. இதே இடத்தில் இந்தச் சோவிலின் முன்றலிருந்தே 24-7-88 அன்று விடுதலைப் புலிகளின் தலைவர் புறப்பட்டுச் சென்றார்.

இந்த சுதுமலைப் பிரதேசத்திற்கு இவ்வாறான ஒரு அரசியல் பின்னணி மட்டுமன்றி இராணுவ ரீதியாக ஒரு பின்னணியும் இருக்கின்றது. அதாவது 21-12-85 அன்று இந்தப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் பிரதான முகாம் ஒன்று இஸ்ரேலிய பாணியில் சிறீலங்கா துருப்புக்களால் தாங்குதலுக் குள்ளானபோது விடுதலைப் புலிகள் அதனை முறியடித்து சாதனை படைத்தனர். அன்று சாதனை படைக்கப்பட்ட இடத்தில் இன்று சரித்திரம் படைக்கப்பட்ட நிகழ்ச்சி இடம் பெற்றது.

இதில் இன்னுமொரு விசேட அம்சம் சுதுமலையில் இந்திய விமானப் படையின் ஹெலிகப்டர்கள் தரையிறங்கிய இடத்திலிருந்து சில மைல் தொலைவில் தான் அதி நவீன ஆயுத வசதிகளும் தொடர்பு சாதனங்களும் பொருத்தப்பட்ட பலாலி விமான தளம் இருக்கின்றது. விமானத் தளத்தில் விமானங்களும் ஹெலிகப்டர்களும் விமானிகளும் விமானப் படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். அப்படி இருந்தும் கையறு நிலையில் சிறீலங்கா அரசு இருந்தமை கேலிக்குரியதாயுள்ளது. பலாலி விமானத் தளத்தில் வந்து இறங்கிய பூரி அவர்களும் கப்டன் குப்தாவும் சுதுமலையிலிருந்து ஹெலிகப்டர் மூலம் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்புலிகளின் இன்றியமையாமை

ஒரு அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளின் பங்களிப்பின் அவசியத்தை இந்தியா புரிந்து கொண்டுள்ளமையும் தெளிவாக்கப்பட்டுள்ளது. தன்னலமற்ற தியாகிகளைத் தனது அமைப்பில் சேர்த்துக்கொண்டு கடந்த காலங்களின் போராட்ட வரலாற்றின் 90% மேற்பட்ட பங்கை வகித்ததோடு இற்றைவரை 617க்கு மேற்பட்ட போராளிகளை களப்பலியாகக் கொண்டு விடுதலைப் போர் நடாத்திவரும் ஒரு சக்திவாய்ந்த இயக்கம் ஒன்றின் தலைவர் என்ற முறையிலும் தியாகச் சின்னமாக கழுத்தில் முதலில் சயனைட் கட்டிய போராளி என்ற முறையிலும் திரு. பிரபாகரன் அவர்களது இன்றியமையாமை முதன்மையானது. அவரும் அரசியல் வாதியைப் போல் செல்லாமல் ஒரு போராட்டத் தலைவனாகவே புறப்பட்டுச் சென்றார். அதனால் தலைவனுக்குரிய அந்தஸ்தோடு முதன் முதலாக களத்திலிருந்து இந்தியாவுக்கு இந்திய விமானத்தில் பேச்சுவார்த்தைக்கு அழைத்துச் செல்லப்பட்ட தலைவன் என்ற கௌரவத்தையும் பெற்றுக்கொள்கிறார். இந்தக் கௌரவம் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் அல்ல இது தமிழீழ மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கௌரவம் என்று அவரே பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் குறிப்பிட்டுச் சென்றார். விடுதலைப் புலிகளின் தன்னலமற்ற தியாகத்தால் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமையைப் பெற்றுக்கொண்ட விடுதலைப் புலிகளின் தலைவரை தமிழ்மக்கள், பெண்கள், குழந்தைகள் முதியவர், மாணவர் இளைஞர்கள் என பல தரப்பட்டவர்களும் ஆயிரக்கணக்கில் வந்து வெற்றியோடு திரும்பி வருக என்று கூறி வாழ்த்தி வழி அனுப்பி வைத்தமையும் சிறப்பானதாகும்.

## தம்பியின் நெஞ்சைத் தொட்ட சம்பவம்

தலைவர் பிரபாகரன் அவர்கள் புறப்பட்டுச் செல்லும் வழியில் ஒரு பெண் தலையில் சுமையுடன் கையில் குழந்தை ஒன்றைத் தாங்கிய வண்ணம் நடந்து வந்தார். அதைக் கண்ட பிரபாகரன் அவர்கள் அருகில் இருந்த சக தோழர்களுக்கு அதனைக் காட்டி இந்தப் பெண் இப்படியான கோலத்தில் வருகின்றார். இதற்குப் பின்னால் எத்தனை துன்பியல் சம்பவங்கள் இருப்பதை அவர் சொன்னால் அன்றி வேறுயார் அறிவார். இப்படி எத்தனை மக்கள் துன்பத்தில் இருக்கிறார்கள். இப்பெண் வடமராட்சியை விட்டு வாழ முடியாது. வெளியேறிய அகதியாக இருக்கலாம். அல்லது இராணுவக் கொடுமைகளால் தனது கணவனையோ பெற்றாரையோ இழந்த அபலைப் பெண்ணாக இருக்கலாம். இப்படியான நிலையில் வாழும் ஏராளமான சாதாரண மக்களது சோகச் சம்பவங்களை நான் ஒருபோதும் மறக்க மாட்டேன். பேச்சு வார்த்தையின் ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களையே ஞாபகப்படுத்திக் கொள்வேன் வரலாற்று ரீதியான தவறை இழைத்தோம் என பழிச்சொல் ஏற்பட என் உயிர்உள்ளவரை இடம்கொடுக்கமாட்டேன்' என்று கூறிவிட்டே புறப்பட்டுச் சென்றார். — அருள்பிரசாத்



பிரதமர் ராஜீவின் அழைப்பை ஏற்று இந்தியா சென்ற தலைவர் பிரபாகரன் சுதுமலையில் இந்திய ஹெலியை நோக்கிச் செல்கிறார்.



விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் இந்தியப் பிரதமர் ராஜீவின் அழைப்பை ஏற்று விசேஷ ஹெலியில் புறப்படுவதற்கு முன் அவரை வழியனுப்பி வைக்கத் திரண்டு வந்த மக்களைக் கட்டுப்படுத்துவதில் விடுதலைப் புலிகள்.

# கலைக்கூடம்

வீடியோ திரைப்படம்

## 'கசப்பு' என்றொரு குறும்படம்

- சகாய புத்திரன் -

மெல்லிய கைவிளக்குவெளிச்சத்தில் ஒருபையன் படித்துக் கொண்டிருக்கும்... காட்சியுடன் குறும்படம்.. ''கசப்பு'' ஆரம்பமாகிறது.

கலை இலக்கியங்கள் யாவுமே மனிதர்களை நெறிப்படுத்தும் பிரச்சார சாதனங்கள் என்பது எப்பொழுதுதோ நிரூபணமாகிவிட்டன...

விடுதலையடைந்துவரும் நாடுகளின் கலை இலக்கியங்கள், விடுதலையடைந்து வரும் நாடுகளின் கலைப்படைப்புகள் யாவும் இதற்கு உதாரணம்,

வெறும் வியாபார நோக்குடன் கலையை காசுபண்ண வெளிக்கிடும் அந்தரம் எதுவும் 'நிதர்சனம்' நிறுவனத்திற்கு இருக்கவில்லை என்பதும், மக்களுக்கு ஏதோ ஒரு செய்தியை வெளிப்படுத்தி அவர்களைச் சிந்திக்க வைக்க வேண்டும் செயலுக்குத் தூண்ட வேண்டும் என்ற நோக்குத்தான் முக்கியமாக அவர்களுக்கிருந்திருக்கிறது.

அந்த முயற்சியில் அவர்கள் கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

வீட்டில் வறுமை... பாடசாலைக்குச்செல்லும் சிறுவன்... அவனது தமக்கை... பொறுப்பற்ற தந்தை... நெடுநாட்களுக்குப் பிறகு தகப்பனுக்கு வேலை ஒன்று கிடைக்கிறது. எல்லாவற்றையும் சமாளிக்கலாம் என்ற நம்பிக்கை அந்த மனிதனுக்கு ஏற்படுகிறது... வழமைபோல அந்த நம்பிக்கையை அவன் பிள்ளைகளுக்குத் தெரிவிக்கிறான்... ஆனால் அந்த நம்பிக்கை அனைத்தையும் சிதறடித்து நெடுநேரம் கழித்து குடிவெறியில் வீட்டுக்கு வருகிறான் அந்தத்தகப்பன் மொப்பிக்கு காசுக்கு நம்பியிருக்கும் மகன்... தனதும், தனது தமக்கையின் பசிக்கும் படிப்பைவிட வேலைக்கு போவது நல்லது என்ற முடிவுடன் கோடரியுடன் புறப்படுகிறான். பொறுப்பற்ற தந்தைக்கு அதிர்ச்சி எமக்கும் அந்த உணர்வை இப்படம் ஏற்படுத்துகிறது,




24 மணி நேரத்தில் நடக்கும் ஒரு சம்பவம் இக்குறும்படம். ஒரு சிறுகதையைப் படித்த நிறைவை இப்படம் ஏற்படுத்தினாலும், சில தொழில் நுட்பக் குறைபாடுகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

காட்சிகளுக்கு இடையில் ஏற்படும் காட்சிமாற்ற இடைவெளி சற்றுக் கூடுதலாக இருப்பதையும் தகப்பனுக்கும்... மகனுக்குமிடையிலும், தகப்பனுக்கும் மகளுக்குமிடையிலும் நடக்கும் சம்பாஷணையில் சற்றுத் தொய்வு ஏற்படுவதையும் தவிர்த்திருக்கலாம்.

குறைகளைவிட நிறைவு தரும் காட்சிகள் கூடுதலாக இக்குறும்படத்தில் இருக்கின்றன காலைநேரம் கிடுகு வண்டில்.. மர அரிவு நிலையத்தின் வேலைகளும்..இருட்காட்சிகள் யாவும் நன்றாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

நடிகர்களின் தகப்பனாகவும் . நண்பராகவும் நடித்தவர்களின் நடிப்புச் சிறப்பாக இருந்தது.

புதுமுகங்களான சகோதரன் சகோதரி இருவரும் நன்றாக நடித்திருந்தபோதிலும் அனுபவக்குறைவினைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை. அடுத்துவரும் படங்களில் இவர்கள் நிச்சயம் சிறந்த ஒரு இடத்தினை பெற்றே தீருவார்கள் என்று நம்பிக்கையுடன் கூறலாம்.

நிதர்சனம் நிலையக் கலைஞர்களின் முதற்குறும்படம் என்ற வகையில்... இக்குறும்படக் கலைஞர்கள் நிச்சயம் பெருமைப்படடுக் கொள்ளலாம்.

# வாசகர் கடிதம்

யாழ்ப்பாண பல்கலைக் கழகம்
8. 9. 87.

பிரதம ஆசிரியர்,
ஈழமுரசு காரியாலயம்,
40, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
ஆசிரியருக்கு,


ஈழமுரசு வார மலரில் 5. 7. 87 ) ஒடுக்கு முறைகள் வெற்றியீட்டிய மலேசிய ஆயுதப் போராட்டமும் ஒடுக்கு முறைகளைத் தோற்கடிக்க வேண்டிய தமிழீழ விடுதலைப் போராட்டமும்'' என்ற தலைப்பில் அம்மான் எழுதிய கட்டுரை பற்றிய விமர்சனமாக இக்கடிதம் அமைகின்றது இன்றைய காலகட்ட சூழ் நிலையில் அதாவது மக்கள் தமது சொந்தத் தாயகத்தை விட்டு வெளியேறும் நிலையில் (பாதிக்கப்பட்டோரும், பாதிக்கப்படாதோரும்) இவ்வாறான கட்டுரைகள் எம் மத்தியில் வரவேற்கப்படுகின்றன. காரணம் மக்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டுவதன் மூலம் இவ்வாறான நடவடிக்கைகளை தடை செய்யலாம். மலேசிய விடுதலைப் போராட்டம் பற்றிய விளக்கம் மக்கள் மத்தியில் மலேசியாவில் நிகழ்ந்தது போன்றே தமிழீழ விடுதலைப் போராட்டமும் நசுக்கப்படும் என்ற அர்த்தத்திலேயே விளக்கப்பட்டிருந்தது அவ்வாறான கருத்தும் நிலவியது. அதனை மாற்றும் வகையின் அம்மானின் கட்டுரையானது மிகச் சிறப்பாக காணப்பட்டாலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. அவை ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும். ஆயினும் நிவர்த்தி செய்திருக்கலாம்.

அதாவது விடுதலைப் போராட்டம் சாதகமான முறையில் அமைவதற்கு பிரச்சாரம் என்பது மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருவியாக காணப்படுகிறது மலேசியாவில் ஆயுதப் போராட்டம் தோல்வியடைய இது முக்கிய காரணமாக அமைகின்றது. அதற்கான காரணங்கள் கம்யூனிச நாடுகளான சீனாவிலும், சோவியத் யூனியனில் இருந்தும் அவர்களுக்கான பிரச்சார வேலைகள் நடைபெறவில்லை. எனவே சர்வதேச ரீதியில் அவர்களுக்கான பிரச்சாரங்கள் காணப்படவில்லை. அத்துடன் செய்தித் தொடர்புகள் காணப்படவில்லை. ( வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் ) மாறாக தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அந்நிய நாடுகளின் பிரச்சாரம் முக்கியமாக இந்தியாவினால் குறிப்பாக தமிழ் நாட்டினால் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அத்துடன் செய்தித் தாள்களிலும், All India News. மாநிலச் செய்திகள், B.B.C. செய்தி, வெரித்தாஸ் செய்திகள் போன்றன இவற்றிற்கு பக்க பலமாக அமைந்தது. அத்துடன் தூரதர்சன் போன்ற தொலைக் காட்சிகளும் உறுதுணையாக இருந்தது. எமது விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் பரப்பப்பட்டு சர்வதேச உலகில் அநுதாபமும், ஆதரவும் ஏற்படுகின்றன. இது எமது விடுதலைப் போராட்டத்துக்கான சாதகமான சூழ் நிலையையே அமைக்கிறது. எனவே, இது சம்பந்தமான தகவல்கள் இக் கட்டுரையில் குறிப்பிடாதது எமது போராட்டத்துக்கான சாத்தியத் தன்மையின் இயல்பினை குறைப்பதாக தெரிகிறது என்பது எனது அபிப்பிராயம்.

அடுத்து இக்கட்டுரையில் ஒப்பீட்டு முறையில் அமைந்த மற்றைய கருத்துக்கள் வரவேற்கத்தக்க முறையில் அமைந்திருக்கிறது. எனவே மேலும் இவ்வாறான கட்டுரைகள் வாரமலரில் தொடர்ந்தும் வர வேண்டும் என்பதே எம் போன்றவர்களின் கருத்தாகும். வியட்னாமிய விடுதலைப் போராட்டம், போன்ற இன்னேரென்ன விடயங்கள் பற்றி எழுத்தின் பயன்தரக் கூடியதாய் இருக்கும். அம்மானுக்கு எம் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
மு. சங்கரி
யாழ்ப்பாண பல்கலைக்கழகம் வரலாற்றுப்பிரிவு

## குட்டிக்கதை



## மனிதம்

அந்த மனிதன் இறந்துவிட்டான்.. அவனுடன் கூட அவனது மனைவி அவனது மகள்... மூன்று பேரும்... உடல் சிதறிச் சின்னாபின்னமாகிப் போய்விட்டார்கள்.

சுடற்புறத்தின் மேற்கே சவக்காலையை மருவி சிதைந்து போய்க் கிடக்கும் பழங்கோவில் சுடுஞ் சுவர்போல அந்த மனிதனும்... சிதைந்து போய்விட்டான்

முழு நாளும் அவனது உடல் அந்த பனை வடலிக் கரையில்... குடபுறக் கிடந்தது.

யாரும் இல்லை... யாரும் அற்ற சூழ்நிலை மனிதர் நடமாட்டமே... மரணித்துதப் போய்விட்ட தான.. சூனியப் பிரதேசம் ...

மதியத்தில் அவர்கள் பாதுகாப்புத் தேடி ஐவராகப் புறப்பட்டு அந்த இடத்தை நோக்கி வந்தார்கள்,

திடீரென விழுந்த ஷெல் ஒன்று நடந்துவந்த அவர்களை குடல சிதறக் குதறி எறிந்தது.

பழங்கோவில் சவுக்காலை ஆலமரத்தின் கீழ் அந்தச் சடலங்களைப் பார்த்தபடி விரக்தியோடு அமர்ந்திருக்கிறான் ஒரு சிறுவன்.

அவனருகில் சிறு காயப்பட்ட ஒரு நான்கு வயதுச் சிறுமி நீண்ட பதினான்கு மணித்தியாலங்களுக்குப்பிறகு முத்தூவும்.., மனிசியும் செத்துப்போச்சினமாம்... குசு குசு... சத்தங்கள்...

எங்கிருந்தோ... தலை நீட்டும் ஓரிரு குரல்கள்...

ஆமி இல்லாத நேரம் போய் பார்க்கவேணும்...

யாரோ துணிந்த கிழடு கட்டை ஒன்று மெதுவாகப் பழங்கோவிலடிக் நடந்தது.

ஆலமரத்தின் கீழ்... அந்தச் சிறுவன்...

முத்தவுடன்... கடல் தொழில் செய்வதற்காக எங்கோ எஸ்டேட் பக்கத்திலிருந்து வந்த ஒரு சின்னஞ் சிறுவன்.

அவனது மடியில் முத்துவின் நான்கு வயதுக் குருத்து ..

நந்தினி சேவியர்

கிழடு குழந்தையைத்தூக்கியது. பசிமயக்கத்தில் குழந்தையின்... உடல் சோர்ந்து கரிந்தது...

நேற்று மதியத்திலிருந்து கிழடு தவித்து போய்...

''தம்பி..வீடுக்குக் கொண்டு போய் பிள்ளைக்குத் தேத்தண்ணி குடுக்கவேணும், நீயும்வாறியே...''

உருக்குலைந்த சடலங்களை.. காய்ந்து வற்றிப் போன... கண்ணீர் தோற்றத்துடன் வெறித்திருந்த அந்தச் சிறுவன் கூறினன்.

''அப்பு... எனக்கும் பசிக்குதுதான்.. நான் உங்களோடை வந்தால்... ஐயாயும்... அம்மாவையும் சாகக் கொத்திப் போடும்...... அதுதான்... நான் இருக்கிறன் தங்கச்சியைக் கொண்டு போங்கோ...

## கண்ணீர் அஞ்சலி



வீரவேங்கை
மதி
இராசதுரை
ஜெயபாலன்
செட்டிகுளம்


தோற்றம்: 30 6 63
மறைவு: 19 7-87

தேசத்தை
மீட்கச் சென்றவனே—
சிதைந்திட்டாயே!
நீ
சிதையலாம்......
தேசமும்
சிதையலாம்......
உன்
உணர்வுகள்
சிதையுமா?
அல்லது
யாராலும்
சிதைக்கத்தான் முடியுமா?
அது
காற்றைப்போல
கலையாது வசிக்கும்!

# “முக்காலமும் காகம் மூழ்கிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா?”

“முக்காலமும் காகம் மூழ்கிக்குளித்தாலும் வெள்ளை கொக்காகாது” என்ற பழமொழியைத்தான் சிறிலங்காவில் சிறிமா அம்மையார் உட்பட சில அரசியல் வாதிகளினதும் “துறவறம் பூண்டவர்களினதும்” சொல்லும் செயலும் நினைவூட்டுகின்றது.

பிரதமர் பதவியில் கண் வைத்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக சேர். பாரன்ஜயதிலகாவை இந்தியாவுக்குத் தூதுவராக அனுப்பிய டி. எஸ். சேனநாயக்கா சில தமிழ்ப் பெரியவர்களையும் சேர்த்து ஐக்கிய தேசியக் கட்சியை அமைத்து சுதந்திர இலங்கையின் அதாவது முதலாவது மந்திரி சபையை அமைத்தார்.



கிழவன் சேனநாயக்கா அதிக காலமிருக்க மாட்டார். அவர் மண்டையைப் போட்டதும் பதவிக்கு வரலாம் என்று மந்திரி சபையிலிருந்தவர்களில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, சேர். ஜோண் கொத்தலாவல ஜே, ஆர்.ஜெயவர்த்தன ஆகியோர் திட்டம் போட்டிருந்தனர்.

கிழவனின் திட்டம் வேறு விதமாக இருப்பதை அறிந்த எஸ். டபிள்யூ. ஆர். டி, பண்டார நாயக்கா சிங்கள மகா சபையை ஆரம்பித்து ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்காக ‘சிங்கள தேசியம்’ பேசி வந்தார். அமைச்சரவையிலிருந்து ராஜினமாச் செய்து வெளியேறினர்.

1952ஆம் ஆண்டில் ஒருநாள் காலை காலிமுகத்திடலில் குதிரையிலிருந்து விழுந்த டி.எஸ். சேனநாயக்கா பின்னர் எழுந்திருக்கவே இல்லை.

அடுத்த பிரதமர் தானே என எண்ணியிருந்த சேர்.ஜோண் கொத்தலாவல தமக்கு அழைப்பு வராதமை கண்டு தாமே நேராக ராணி மாளிகைக்குச் சென்று பதில் கவர்னர் ஜெனரலாக இருந்த பிரதம நீதியரசரைச் சந்தித்துக் கேட்டபோது வெளிநாடு சென்றிருக்கும் கவர்னர் சோல்பரி பிரபு தான் வரும்வரை எவரையும் நியமிக்க வேண்டாமென்று கூறியிருப்பதாகத் தெரிவித்தார்.

சோல்பரிப்பிரபு நாடு திரும்பியதும் சேர் ஜோண் சென்று சந்தித்தார். டட்லி சேனநாயகாவையே தமக்குப் பின் பிரதம்மந்திரியாக நியமிக்கும்படி டி. எஸ் சேனநாயகா கூறியிருந்தார் என்று தெரிவித்த சோல்பரிப் பிரபு அமைச்சரவையிலும் டட்லிசேனநாயகாவுக்கு முழு ஒத்துழைப்புக் கிடைக்குமென்றும் சேர். ஜோணைப் பிரதமராக நியமித்தால் ஒத்துழைக்க முடியாதென அமைச்சர்கள் சிலர் தனக்குக் கடிதம் எழுதியிருப்பதாகவும் தெரிவித்தார். ஒத்துழைக்க முடியாதென்று கையொப்பம் வைத்த அமைச்சர்களில் ஜி. ஜி. பொன்னம்பலமும், சேர். லலிதா ராஜபக்சாவும் அடங்குவர்.

ஆத்திரத்துடன் திரும்பிய சேர் ஜோண் “பிரதமர் ஒட்டப் பந்தயம்” என்று ஒரு பிரசுரமும் வெளியிட்டார். டட்லி பிரதமர் பதவியை அப்பொழுது விரும்பவில்லை. ஆனாலும் அவரைத் தேடிப் பிடித்துப் பதவியேற்கும் படி சகாக்கள் வற்புறுத்தினர். சேர். ஜோணே டட்லி தேடிச் சென்று தமது அமைச்சரவையில் சேர்ந்து கொள்ளச் சம்மதிக்கச் செய்தார்.

1953 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்த்தன சமர்ப்பித்தார். அரிசி விலையை அதிகரித்தார். எதிர்க்கட்சியினர் துள்ளி எழுந்தனர். ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. எதிர்க்கட்சித் தலைவர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவுடன் இடதுசாரித் தலைவர்களும் சேர்ந்து கொண்டனர். அரிசி விலை உயர்வை எதிர்த்து ஹர்த்தால் நடைபெற்றது. குழப்பங்கள் தலைதூக்கின. பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருசில அப்பாவி மக்கள் மாண்டனர்.

டட்லியால் இதைப் பொறுக்க முடியவில்லை. பதவியை ராஜினமாச் செய்து அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

சேர். ஜோண் கொத்தலாவல பிரதமராகப் பதவியேற்ருர். ஆசை நிறைவேறிவிட்டது.

சேர். ஜோண் பிரதமரானதும் அடுத்த பிரதமராக வருவதற்கு வழி கண்டுபிடித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அமைத்துக் கொண்ட எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா சிங்களமே ஆட்சி மொழியாக வேண்டுமென்று குரல் கொடுத்தார். சிங்கள மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதே தமது இலட்சியமென்றும் சிங்கள மக்களை ஐக்கியப்படுத்தி உரிமையுடன் வாழச் செய்வதே தமது ஒரே நோக்கமென்றும் பிரசாரம் செய்தார்.

வர்த்தனவும் அவரது விபலவகார சமசமாஜக் கட்சியினரும் சேர்ந்து கொண்டனர். தகநாயகவும் இணைந்து கொண்டார்.

ஆட்சி அதிகாரப் போட்டி நாட்டில் சூடேறியது. ஐக்கிய தேசியக்கட்சி களனியில் மாநாடு கூடி ‘சிங்களமே ஆட்சி’ மொழி என்று பிரகடனம் செய்தது.

பண்டாரநாயகா சிங்களம் ஆட்சி மொழியாகும் தமிழுக்கும் நியாயமான உரிமை வழங்கப்படுமென்றார். ஐக்கிய தேசியக் கட்சியோ சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று கூறியது.

1956 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தை தக்கலைத்துப் பொதுத் தேர்தலுக்கு உத்தரவிடப்பட்டது.

மொழி வெறி தலைவிரித்தாடியது. தேர்தல் பிரசாரம் வகுப்புத் துவேஷமாக மாறியது.

பண்டாரநாயகாவும் இதர கட்சியினரும் சேர்ந்து மகாஜன எக்சர் பெரமுன (மக்கள் ஐக்கிய முன்னணி) என்ற அமைப்பில் போட்டியிட்டனர்.

பண்டாரநாயகாவின் மக்கள் ஐக்கிய முன்னணி அமோக வெற்றியீட்டி ஆட்சிக்கு வந்தது. ஐக்கிய தேசியக் கட்சி எட்டு ஆசனங்களை மட்டுமே வென்று படுதோல்வியடைந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழரசுக்கட்சி அமோக வெற்றியீட்டியது.

சிங்களம் ஆட்சிமொழியாக்கப்பட்டது. பண்டாரநாயகா தமது வாக்குறுதியை நிறைவேற்றினர். தமிழுக்கு அந்தஸ்து பெறுவதற்கும் தமிழ் பிரதேசத்தைக் காப்பதற்கும் உறுதியளித்த தமிழரசுககட்சி சாத்வீகப் போராட்டத்தைத் தொடங்கியது.

இடதுசாரியினரின் வேலை நிறுத்தங்கள் ஒரு புறமும் தமிழரசுக் கட்சியினரின் சாத்வீகப் போராட்டமும் பயமுறுத்தலும் மறுபுறமுமாகத் திண்டாடிய பண்டாரநாயகா தமிழரசுக் கட்சியினருடன் பேச்சு வார்த்தை நடத்தி 1957 ஆம் ஆண்டில் ஒரு ஒப்பந்தம் செய்தார். ‘பண்டா-செல்வா’ ஒப்பந்தம் என்று இது அழைக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின்படி வடக்கில் ஒரு பிரதேசசபையும் கிழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபைகளும் அமைக்கப்படவும் இப்பிரதேச சபைகள் ஒன்ருக இணைய வேண்டுமெனத் தீர்மானித்தால் ஒரே பிரதேசசபையாக அமையலாமென்றும் அதிகாரம்வழங்கப்பட்டிருந்தது. கல்வி, குடியேற்றம் இப்பிரதேசசபைகளின் பொறுப்பிலிருக்கவும் வசதி செய்யப்பட்டிருந்தது.

பண்டா செல்வா ஒப்பந்தத்திலுள்ள வடக்கு - கிழக்கு இணைப்பை கடுமையாக எதிர்த்தார். இதற்காகக் கண்டிக்கு ‘கால்நடை’ யாத்திரையையும் ஆரம்பித்தார். பெரும் குழப்பம் ஏற்பட்டது.

பண்டாரநாயகா அரசுக்கு எதிராக ஜே. ஆர். தொடங்கிய பண்டாரநாயகா அரசுக்குள்ளே அதிகாரத்துக்குப் போட்டிக்கு நின்றவர்களுக்கும் வாய்ப்பாக அமைந்தது.

1957 ஆம் ஆண்டில் பண்டா செல்வா ஒப்பந்தத்துக்குத் தொடங்கிய எதிர்ப்பு 1958 இல் முதலாவது பெரும் இனக்கலவரத்துக்கு வழி வகுத்து 1959 இல் பண்டாரநாயகாவின் கொலையில் முடிந்தது.

பண்டாரநாயகாவின் கொலையைத் தொடர்ந்து காபந்து பிரதமராக நியமிக்கப்பட்ட டபிள்யு. தகநாயகாவுக்கும் பண்டாரநாயகா அமைச்சரவையில் அதிகார ஆசையுடனிருந்தவர்களுக்குமிடையில் மோதல் ஏற்படவே அமைச்சர்கள் பலரை பதவி நீக்கம் செய்த தகநாயகா புதியவர்களை அமைச்சர்களாகநியமித்ததுடன் பிரதமரின் வாசஸ்தலமான அலரிமாளிகையிலிருந்தபடியே லங்கா பிரஜா தந்திரவாதக்கட்சி என்ற புதியகட்சியையும் உருவாக்கினர்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுத்தேர்தல் நடைபெற்றது. மக்கள் ஐக்கிய முன்னணியிலிருந்து பலரும் பிரிந்து சென்றதுடன் பலர் வெளியேற்றப்பட்டுமிருந்ததால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்ற பெயரில் போட்டியிட்ட பண்டார நாயகாவின் கட்சிக்கு சி. பி. டி. சில்வா மைத்திரிபால சேனநாயகா ஆகியோர் முன்னின்றனர். சிறிமா பண்டாரநாயகா போட்டிக்கு வருவதற்கு மறுத்துவிட்டார்.

இத் தேர்தலில் ,மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபட்ட டட்லி சேனநாயகா மிகக் குறைந்த பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்தார். இத் தேர்தலிலும் வடக்கு கிழக்கிலிருந்து வந்த தமிழரசுக்கட்சியினர் இருதரப்புடன் பேசிய பேரம் சரிவராததால் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடந்த வாக்கெடுப்பில் அவர்கள் எதிர்த்து வாக்களித்ததால் அரசாங்கம் கவிழ்ந்தது.

மீண்டும் 1960 ஆம் ஆண்டு ஜூலையில் பொதுத் தேர்தல் நடந்தது. இம்முறை திருமதி சிறிமா பண்டாரநாயகாவை சுதந்திரக்கட்சியினர் தீவிரமாக அரசியலுக்கு இழுத்து வந்தனர். ஆனாலும் தாம் போட்டிக்கு நின்று எத் தொகுதியிலும் வெற்றி பெற விரும்பவில்லை எனக் கூறிவிட்டார். சிறிமா அம்மையாரின் பிரசாரம் சுதந்திரக்கட்சிக்கு அமோக வெற்றியைத் தேடிக் கொடுத்தது.

பெரும்பான்மைப் பலத்துடன் 1966ஆம் ஆண்டு மார்ச் மாதத்தேர்தலிலும் சரி ஜூலை மாதத் தேர்தலிலும் சரி தமிழருக்கெதிரான துவேஷப்பிரசாரத்துக்குக் குறைவில்லை. நாட்டைப் பிரித்துக் கொடுக்கப்போகிறார்என்று டட்லிக்கு எதிராக மார்ச் மாதத்தேர்தலிலும் நாட்டைப் பிளவுபடுத்தப் போகிறார் என்று சிறிமாவுக்குகெதிராக ஜூலைத் தேர்தலிலும் இரு தேர்தல்களிலும் இரு தரப்பினரும் தமிழருக்கு உரிமை வழங்கப்பட முடியாதென்றும் மேடைகளில் முழங்கினர். மீண்டும் வகுப்புவாதத் துவேஷம் தலைதூக்கி நின்றது.

1964ஆம் ஆண்டில் சிறிமா பண்டாரநாயக்காவின் அரசு வீழ்ந்ததைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் தமிழருக்கெதிரான துவேஷப் பிரசாரம் தலைதூக்கியே நின்றது.

1965 தேர்தலில் வெற்றியீட்டிய டட்லி சேனநாயக்கா தமிழரசுக் கட்சியையும் சேர்த்து தேசிய அரசு அமைத்தார். மாவட்டசபை அமைப்பதற்கு டட்லிஒப்புக் கொண்டு இரகசிய ஒப்பந்தம் ஒன்றும் செய்யப்பட்டிருந்தது. 1966 ஆம் ஆண்டில் தமிழ்மொழிச் சட்ட (விசேஷ சரத்துக்கள்) நிறைவேற்றப்பட்டதை எதிர்த்து சுதந்திரக் கட்சியினரும் மற்றையோரும் பெரும் ஆர்ப்பாட்டம் செய்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஒருபிக்கு மாண்டார். மீண்டும் இனத் துவேஷம் தலையெடுத்தது.

1970ஆம் ஆண்டுத்தேர்தலிலும் தமிழர் பிரச்சினை இடம் பெற்றது. புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுமென்றும் இதில் 29ஆவது சரத்து நீக்கப்படுமென்றும் சுதந்திரக் கட்சி தெரிவித்தது.

சுதந்திர கட்சி இடதுசாரிகளுடன் சேர்ந்து ஐக்கியமுன்னணியாகப் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்று புதிய அரசியலமைப்பை உருவாக்கியது. தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க கொண்டுவரப்பட்ட யோசனைகள் நிராகரிக்கப்பட்டன.

1977ஆம் ஆண்டும் தேர்தலில் தமிழர் பிரச்சினை பெருமளவில் தலைதூக்கி நின்றது. தேர்தலில் ஜே. ஆர் அரசு வெற்றியீட்டியதுமே நாடுமுழுவதிலும் இனக்கலவரம் வெடித்தது.

புதிய அரசியலமைப்பை உருவாக்கிய ஜே. ஆர். அரசும் தமிழ் மக்களுக்கு உரிமை எதுவும் அளிக்க முடியாது என்று கூறிவிட்டது.

தமிழ் மக்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து மாவட்ட

(10ஆம் பக்கம் பார்க்க)

## வார சாரம்

எஸ்.எம்.ஜி.



தரமான, சுவையான

★ பால்
★ தயிர்
★ நெய்

ஆகியவற்றிற்கு

அர்ச்சுனு
உற்பத்திகளை
நாடுங்கள்

ஞாயிற்றுக்கிழமை 26-7-87

ஈழமுரசு
தமிழ்த்தேசிய ஞாயிறு வார மலர்

EELAMURASHU

உள்ளூர் உற்பத்திப்
பொருட்களை ஊக்குவிக்க
நாடுங்கள்!
★
உதயம்
பல்பொருள்
அங்காடி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

## நல்லூரில் ஒரு வீட்டில் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் துப்பாக்கி, கத்தி என்பனவற்றுடன் ஒருவர் வீட்டில் புகுந்த இளைஞர் கோஷ்டியொன்று வீட்டுக்காரரை 'நீர் பவுடர் வியாபாரியாமே' என்று கத்தியைக் காட்டிப் பயமுறுத்தி, பின் வீட்டார் எல்லோரையும் அறையுள் பூட்டி வைத்து கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (ச)

## தமிழகத்தின் பார்வையில்...

நேற்றைய தினமணி

### "இடைக்காலத் தீர்வாகவே அமையும்" பாலகுமார்

(சென்னை)

இப்போது முன்வைக்கப்படும் சமரசத் திட்டம், இலங்கையின் மலையகப் பகுதி



மக்களின் பிரச்சனைகள் பற்றிப் பரிசிலனை செய்யாமையினால் இது இடைக்காலத் தீர் வாகவே அமையும் என ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த பாலகுமார் கூறியுள்ளார்.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மககளையும் மலையகத்தமிழ் மக்களையும் ஒரே தேசிய இனமாகக் கருதுவது பிரச்சனைகளை ஏற்படுத்திவிடும் என்று கூறிய அவர் இலங்கை அரசின் திட்டம் தமிழர் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்பாக அமையமாட்டாதெனவும் எனினும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முயலும் இந்திய அரசின் முயற்சிக்கு தமது இயக்கம் இடையூறாக இருக்காது என்றும் தெரிவித்துள்ளார்,

### ஜயவர்த்தன இருப்பாரா? உறுதியாக -சிவசிதம்பரம்

(சென்னை)

புதிய சமரசத் திட்டம் குறித்து தமக்கு எதுவும் தெரியா



தென தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாசத் திட்டம் குறித்து பத்திரிகை வாயிலாகத் தெரியவந்தது. இந்திய வெளியுறவு செயலாளர் கே. பி. எஸ். மேனன் பத்திரிகைகளில் தெரிவித்திருப்பது நன்றாகத்தான் உள்ளது. ஆனால் ஜனாதிபதி ஜெயவர்த்தன இதில் உறுதியாக இருப்பாரோ என்பதனை உறுதியாகக் கூறமுடியாது. தந்திரமாகச் செயற்படுவதே ஜெயவர்த்தனவின் ராஜதந்திரமாகும். இவ்வாறு சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

### ஆட்சிக்குழுக் கூட்டத்தில் ஜெயசூரியாவின் எதிர்ப்பு

(சென்னை)

வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரு மாநிலசபை அமைப்பது எனும் திட்டம் இலங்கை அரசு முன்னர் கொண்டிருந்த நிலைப்பாட்டிற்கு முற்றிலும் மாறானது என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் காமினி ஜெயசூரியா தெரிவித்ததாகத் தெரியவருகிறது. பிரதமர் பிரேமதாசா நாடு திரும்பிய பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படவேண்டுமென வலியுறுத்திய அமைச்சர்களில் காமினிஜெயசூரியா முக்கியமானவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சுயமரியாதையினை இழந்து ஒரு தீர்வினை காண்பதில் பயன் என்ன என்று அமைச்சர் காமினி ஜெயசூரியா வினவியதாகவும் கூறபபடுகிறது மேலும் உயிர்களைப்பாலிகெடுக்கவும் இலங்கையினை ஆபத்துக்குள்ளாக்கவும் தான் விரும்பவில்லை என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன இக்கூட்டத்தில் தெரிவித்தாராம்

நேற்றைய மக்கள் குரல்

### இனப்படுகொலையை நிறுத்த உதவுக! 25,000 மாணவர் மகஜர்

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகளை உடனடியாக தடுத்து நிறுத்தும்படி தமிழ் நாடு திண்டுக்கல்லைச் சேர்ந்த இருபத்தையாயிரம் மாணவ, மாணவியர்கள் பிரதமர் ராஜீவ் காந்திக்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் கடிதமெழுதியுள்ளனர்.

இலங்கையில் பல அப்பாவித் த்மிழர்கள் கொல்லப்படுவதாகவும் சண்டையை நிறுத்தி உயிர்க்கொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ராணுவ கண்ணிவெடியில் காலிழந்தார் இளைஞர்!

(சுன்னாகம்)

இராணுவத்தினர் வைத்துச் சென்ற கண்ணிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவர் காலொன்றை இழந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் கட்டுவன் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

தெல்லிப்பழை சூடுவிழுந்தானில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் சிங்கராசா கோடீஸ்வரன் (வயது 19) கட்டுவன் பகுதியில் வீட்டினைப் பார்க்கச் சென்றபோது ஏற்கனவே இராணுவத்தினர் இவ்விடத்திற்கு வந்த போது புதைத்துவிட்டுச்சென்ற கண்ணிவெடியில் சிக்கி படுகாயமடைந்து காலொன்றை இழந்துள்ளார் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### கோலாகலமாக

இன்று பதவியிருலிந்துவிலகிக்கொண்ட ஏழாவது ஜனாதிபதி கியானி ஸெயில்ஸிங் புதிய ஜனாதிபதியிடம் பிரியாவிடைபெற்று புதிய இல்லத்துக்குச் சென்றபோது அவருடன் புதிய ஜனாதிபதியும் இல்லம் வரை சென்றார்.

இன்று காலையில் பிரதமர் ராஜீவ் இல்லத்துக்குச் சென்ற ஸெயில்சிங் பிரதமருடன் காலை உணவு உண்டார்.

புதிய ஜனாதிபதியாக திரு. வெங்கட்ராமன் பதவியேற்றுக்கொண்டபின் நேற்று பிற்பகல் ராஷ்டிரபதிபவனுக்குப் பிரதமர் சென்று ஜனாதிபதியுடன் ஒருமணி நேரம ஆலோசனை நடத்தினார்.

### நேற்றும்

உட்பட இருவர் காயமடைந்தனர்.

கொட்டடிப் பகுதியை நோக்கி இராணுவம் சுட்டதில் விஸ்கீள்சாய்பு (60) என்ற முஸ்லிம் முதியவரும், மதியோகநாதன் (17) என்ற இளைஞருமே காயமடைந்து யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

### சுதுமலையில்

கள் தலைவர் பிரபாகரன் நேற்று முன்தினம் சுதுமலை அம்மன் கோவிலடியிலிருந்தே இந்திய ஹெலிக்கொப்ரர் மூலம இந்தியா பயணமானார் என்பது தெரிந்ததே.

### தமிழ்...

இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவு மூடப்படுமென்றும் சிறிலங்கா இராணுவத்தினரைப் பாகிஸ்தானுககுப் பயிற்சிக்கு அனுப்புவதுநிறுத்தப்படுமென்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்திருப்பதாக நேற்று மாலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்தியறிக்கை தெரிவித்தது.

### புனர்வாழ்வு அமைச்சராக அத்துலதுவிருப்பம்

சமாதானத்தீர்வு ஏற்பட்ட பின்னர் தாம் புனர்வாழ்வு அமைச்சராக கடமையாற்ற விரும்புவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவாத்தனவிடம் கேட்டிருப்பதாக அறியப்படுகிறது.

### மயிலிட்டி மார்பு நோய் மருத்துவ மனையும் மூடப்பட்டது

(சுன்னாகம்)

இராணுவ நடவடிக்கைகளாலும் கெடுபிடிகளாலும் மேலும் ஒரு வைத்தியசாலை முற்றாகவே மூடப்பட்டுள்ளது. மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தவர்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இவ் வைத்தியசாலைக்கு முன்பாகச்செல்லும் தொண்டமானாறு காங்கேசன் துறை வீதியை இராணுவத்தினர் அடிக்கடி பாவிப்பதாலும், வைத்தியசாலை வளவினுள் இராணுவத்தினர் புகுந்துகொள்வதாலும் நோயாளர் பலரும் அவசரமவசரமாக வெளியேறிச் சென்றுள்ளனர்.

### அமுல் படுத்தும் நாடும் இந்தியாவே!

(சென்னை)

இலங்கையின் இனப் பிரச்சனைக்கு இதுவரை காலமும் யோசனைகள் கூறிவந்த நாடாக விளங்கிய இந்தியா இனி இனப் பிரச்சனைக்குத் தீர்வு என உடன்பாடு காணப்பட்ட விடயங்களை அமுல் படுத்துவதற்கு உத்தரவாதமளிக்கும் நாடாக விளங்கும் என தமிழகத்திலிருந்து வெளியாகும் நேற்றைய 'மக்கள் குரல்' பத்திரிகை கருத்து வெளியிட்டது.

### இணைப்பினால் ஈழம் உருவாகுமாம்!

(கண்டி)

பயங்கரவாதிகளின் கோரிக்கைகளில்தொண்ணூற்றைந்து வீதம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு இணைப்பு நிச்சயமாக ஈழம் உருவாவதற்கு வழிகோலும். இவ்வாறு அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரோ சந்தானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வட்ட மேசை மகாநாடு நடத்தபபட்ட காலத்திலிருந்து மகாசங்கமும் ஏனைய சமய தலைவர்களும் தனியான மாகாண சபை அமைக்கப்படுவது முஸ்லீம்களின் நலன்களுக்குப் பாதகமாக அமையும் என்பதனையும் அது நாட்டின் ஐக்கியத்திற்கு பயமுறுத்தலாக அமையும் என்பதனையும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

மலையகத்துக்கும் ஒரு மாகாணசபை அமைக்கும்படி கோரப்பட்டால் என்ன செய்ய முடியும் என்றும் தேரோ கேள்வி எழுப்பினர்.

### எதிர்ப்பவர்கள் மனச்சாட்சியற்றவர் ...குமாரணதுங்க

(கொழும்பு)

ஆயிரக்கணக்கானவர்கள் பலியானதன் பின்னர் இப்போது சமாதானத் தீர்வு ஏற்படும் என்ற சூழ்நிலை தோன்றியுள்ளது. இதை



எதிர்ப்பவர்கள் மனச்சாட்சியில்லாதவர்களென்றும், இன்றைய சமாதான சூழ்நிலையை எவராவது கெடுத்தால் எதிர்காலத்தில் பலியாகும் ஒவ்வொரு உயிருக்குமான பொறுப்பையும் அவர்களே ஏற்க வேண்டும் என்றும் சிறிலங்கா மக்கள் கட்சியின் செயலாளர் விஜய குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

### பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

நேற்று ஆரம்பமாகிய க. பொ. த. உயர்தரப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் மிகவும் நல்ல முறையில் நடைபெற்றது. பரீட்சை தொடர்ந்தும் நல்லபடியாக நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 140ஆம் இலக்கத்திலுள்ள ஈழமுரசு அச்சகப்பிரிவில் 26-7-1987 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது தொலைபேசிஇல: 22347